பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

NITHIYAKALA

கலா ரசிகர்களையே
அதிசயிக்க வைக்கும்
நவீன டிசைன்களில்
தங்க, வைர நகைகளைப்
பெற்றுக் கொள்ள

'இன்றே விரையுங்கள்!'

நியூ நித்தியகலா
நகைமாளிகை

19, செட்டியார் தெரு,
கொழும்பு—11.
தொலைபேசி:— 547111.

தினபதி

ரூ 2/=

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல. 4581 1984 ஜூன் 13 புதன்கிழமை ★ ★ ★ தினபதி

நித்தியகலா!

22 கெரட் நகைகளுக்கு
நம்பிக்கை, நாணயம்,
உத்தரவாதமும் அத்தனைக்கும்
நித்தியகலாவை
நாடுங்கள்;

NEW Nithiyakala Jewellers

19, SEA STREET,
COLOMBO — 11.
PHONE: 547111

# சுவிற்சர்லாந்தில் தமிழ் அகதிகள் மோதல்!

## கத்தி, தடிகள் சகிதம் தாக்குதல்: 7 பேர் காயம்

பேர்ன், ஜூன் 12

இலங்கையிலிருந்து சென்று சுவிற்சர்லாந்தில் தஞ்சம் கோரி இருக்கும் தமிழ் அகதிகள் மத்தியில் மோதல் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மோதலின் போது கத்திகள், தடிகள், இரும்பு பாளங்கள் பெரும் அளவு பாவிக்கப்பட்டன. 7 பேர் காயம் அடைந்துள்ளனர்.

இச்சம்பவம் திங்கட்கிழமை நிகழ்ந்தது. வாழ்க்கை வசதிகளும் புகலிடம் கோரி முதலில் விண்ணப்பித்தவர்கள் யார் என்பதில் ஏற்பட்ட கருத்து வேறு

பாளங்கள் சகிதம் அந்த விடுதிக்கு வந்து விடுதியில் உள்ள இளைஞர்களைத் தாக்க ஆரம்பித்தார்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இலங்கையில் கடந்த வருடம் ஏற்பட்ட கலவரத்தை அடுத்து சுவிற்சர்லாந்து வந்திருக்கும் சுமார் 1300 பேர் தற்போது

## முஸ்லிம் ஆசிரியர்களுக்கு ரூ. 300 முற்பணம்

மாத்தறை, ஜூன் 12

சகல முஸ்லிம் ஆசிரியர்களுக்கும் ரமழான் பெருநாள் முற்பணமாக, இம் மாதச் சம்பளத்துடன் 300 ரூபா வழங்கப்படும்.

இது தொடர்பான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகிறது. (த-25)

சோமண்ணை



தந்திக் கம்பிகள் இருந்தாலும், திருட்டுப் போனாலும், எல்லாம் ஒண்டுதான் பாருங்கோ. தந்திகள் எப்பொழுதும் போறது தபாலிலை தானே!

# ஊழியர் இல்லாத விற்பனை நிலையம்

## முதல் தடவையாக திறக்கப்படும்

கொழும்பு, ஜூன் 13

ஊழியர்கள் இல்லாத ஆயுர்வேத மூலிகை விற்பனை நிலையங்களைத் திறக்க, சுதேச வைத்தியத்துறை அமைச்சர் திரு. டபிள்யூ ஜே. எம். லொக்குபண்டார தீர்மானித்திருக்கிறார்.

இவ்வாறான முதலாவது விற்பனை நிலையம், சுதேச வைத்தியத்துறை அமைச்சில் நிறுவப்படும்.

வெளிநாடுகள் சிலவற்றில் ஊழியர்கள் இல்லாத விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

பொருள்களை வாங்குவோர் நேர்மையாக நடந்து கொண்டால், இந்த விற்பனை நிலையங்கள் பயன் தருவனவாக அமையும்.

"உங்களில் எனக்கு நம்பிக்கை" என்ற வாசகம் உள்ள அறிவிப்பு ஒன்று, சுதேச வைத்தியத்துறை அமைச்சின் அலுவலக வாயிலில் தொங்க விடப்படும்.

அந்த அறிவித்தலுக்கு அருகில் மேசை ஒன்றில், பணம் போடுவதற்காக உண்டியல் ஒன்று வைக்கப்படும். அதன் அருகே மூலிகைகளின் விலைகள் குறிப்பிடப்பட்ட அட்டவணை ஒன்று வைக்கப்படும்.

மூலிகைகளை வாங்க விரும்புவோர் அவற்றின் விலைக்குரிய பணத்தை அந்த உண்டியலில் போட்டு விட்டு தமக்குரிய பொருளை எடுத்துச் செல்லலாம். இதுவே புதிய திட்டம். (த-11)

# ஆசிரியை ஷாமா கொலையில் நால்வர் கைது

## 3 மாத விசாரணையில் திருப்பம்

கொழும்பு, ஜூன் 13

கேகாலை நகரை பெரும் பரபரப்பில் ஆழ்த்திய ஆசிரியை செல்வி ஷாமா தெதிகமையின் கொலை தொடர்பாக, நான்கு பேர் இரகசியப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர். கொலை

யப் பொலீஸாரிடம் விசாரணைகள் ஒப்படைக்கப்பட்டன.

கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்ற விசாரணைகளை அடுத்து இரகசியப் பொலீஸார், இப்பொழுது நான்கு சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

அரசின் நடவடிக்கைகளுக்கு

# முஸ்லிம் சமூகம் ஒத்துழைப்புநல்கவேண்டும்

## முஸ்லிம் லீக் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 13

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு, முஸ்லிம் சமூகம் சகல ஒத்தாசைகளையும் வழங்க வேண்டும் என, அகில

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட, அரசாங்கத்துக்கு சகல ஒத்தாசைகளையும் வழங்கும்படியும் கேட்டுக் கொள்கிறது."

இவ்வாறு அகில இலங்கை முஸ்லிம் லீக் தீர்மானம் நிறைவேற்றி இருப்பதாக, அதன்

காயம் அடைந்துள்ளனர்,

இச்சம்பவம் திங்கட்கிழமை நிகழ்ந்தது. வாழ்க்கை வசதிகளும் புகலிடம் கோரி முதலில் விண்ணப்பித்தவர்கள் யார் என்பதில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளுமே இந்த மோதலுக்குக் காரணம் என்று தெரிகிறது என்று அங்குள்ள இரட்சண்யசேனை விடுதியின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அந்த விடுதியில் சுமார் 40 தமிழ் இளைஞர்களுக்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

சுமார் 60 தமிழ் இளைஞர்கள் கத்திகள், தடிகள், இரும்புப் பாளங்கள் சகிதம் அந்த விடுதிக்கு வந்து விடுதியில் உள்ள இளைஞர்களைத் தாக்க ஆரம்பித்தார்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

சுவிற்சர்லாந்தில் எல்லாமாக சுமார் 18,000 பேர் புகலிடம் கோரி இருக்கிறார்கள். அரசு இவர்களின் விண்ணப்பங்கள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆயினும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து முடிப்பதற்கு சுமார் 6 வருடகாலம் செல்லும்.

இலங்கையில் கடந்த வருடம் ஏற்பட்ட கலவரத்தை அடுத்து சுவிற்சர்லாந்து வந்திருக்கும் சுமார் 1300 பேர் தற்போது புகலிடம் கோரி விண்ணப்பித்திருக்கிறார்கள்.

தமிழர்களும், வெள்ளையர் அல்லாத ஏனைய சமூகத்தவர்களும் புகலிடம் கோரி வந்திருப்பது குறித்து அங்குள்ள சிறிய வலதுசாரிக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

அவை சுவிற்சர்லாந்து அரசியலில் தற்போது ஆதரவு பெற ஆரம்பித்திருக்கின்றன.

(த-ண)

கொழும்பு, ஜூன் 13

கேகாலை நகரை பெரும் பரபரப்பில் ஆழ்த்திய ஆசிரியை செல்வி ஷாமா தெதிகமையின் கொலை தொடர்பாக, நான்கு பேர் இரகசியப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர். கொலையுண்டவரின் வீட்டிலிருந்து திருடப்பட்ட தங்க ஆபரணங்களும் மீட்கப்பட்டன.

கேகாலையைச் சேர்ந்த செல்வி ஷாமா தெதிகம பெரும் சொத்துகளுக்கு அதிபதி. ஆசிரியராக கடமையாற்றி வந்தார். கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி இரவு நித்திரையில் இருந்த வேளையில் கற்பழிக்கப்பட்டு கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். அவரின் தங்க ஆபரணங்களும் கொள்ளை அடிக்கப்பட்டன.

இது தொடர்பாக கேகாலை பொலீஸார் விசாரணை மேற்கொண்டனர். பின்னர் இரகசியப் பொலீஸாரிடம் விசாரணைகள் ஒப்படைக்கப்பட்டன.

கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்ற விசாரணைகளை அடுத்து இரகசியப் பொலீஸார், இப்பொழுது நான்கு சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர். இவர்கள் கூலிக்கு கொலை செய்யும் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என தெரிய வருகிறது.

ஷாமா தெதிகமையின் சொத்துகளில் ஆசைப்பட்ட சிலர் 25 ஆயிரம் ரூபா கொடுத்து, இந்த கொலையை செய்யத் தூண்டி உள்ளனர் என விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாம்.

அங்கிருந்து கொள்ளை அடிக்கப்பட்ட தங்க ஆபரணங்கள், கேகாலையிலும், கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள கடைகளிலும் விற்பனை செய்யப்பட்டிருப்பதாக இரகசியப் பொலீஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

(த-மு)

கொழும்பு, ஜூன் 13

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு. முஸ்லிம் சமூகம் சகல ஒத்தாசைகளையும் வழங்க வேண்டும் என, அகில இலங்கை முஸ்லிம் லீக் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் விசேஷ செயற் குழுக் கூட்டம், நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

"பயங்கரவாதத்தை அடக்குவதற்கு அரசாங்கம் முயற்சித்து வரும் வேளையில், அதனை இக்கட்டான நிலைக்கு உள்ளாக்க தனிப்பட்ட முறையிலோ கூட்டாகவோ எத்தகைய நடவடிக்கைகளிலும் முஸ்லிம் சமூகம் ஈடுபடக் கூடாது என அகில இலங்கை முஸ்லிம் லீக் வேண்டுகோள் விடுக்கிறது.

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட, அரசாங்கத்துக்கு சகல ஒத்தாசைகளையும் வழங்கும்படியும் கேட்டுக் கொள்கிறது."

இவ்வாறு அகில இலங்கை முஸ்லிம் லீக் தீர்மானம் நிறைவேற்றி இருப்பதாக, அதன் தலைவர் அல்ஹாஜ் டாக்டர் எம். சி. எம். கலீல் அறிவித்திருக்கிறார்.

(க)

## பொசன் வைபவத்தில் பிரதமர்

கொழும்பு, ஜூன் 13

இன்று அனுராதபுரத்தில் நடைபெறும் பொசன் பௌர்ணமி தின வைபவத்தில் பிரதமரும். உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான திரு. ஆர். பிரேமதாச பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

காலை 5-45 மணிக்கு அனுராதபுர ஜயஸ்ரீ மகா போதியில் பௌத்த மத ஆராதனைகளுடன் சில அனுஷ்டானம் நடைபெறும்.

(த-ப)

## தந்தத்திலான யானைகளை கடத்த முயற்சி

கொழும்பு, ஜூன் 13

தந்தத்தினால் செய்யப்பட்ட யானைகளை சுவீடனுக்கு எடுத்துச் செல்ல முற்பட்டவருக்கு, 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இலங்கையிலிருந்து சுவீடன் செல்வதற்காக, கொழும்பு சர்வதேச விமான நிலையம் வந்திருந்த சமயம், விமான நிலைய சுங்க அதிகாரிகள் அவரது பொதிகளை சோதனையிட்டனர்.

அப்பொழுதே தந்தத்தினாலான யானைகள் அகப்பட்டன.

(த-11)

## 8 மாவட்டங்களில் காற்றுடன் கூடிய மழை

## இன்றும் தொடரலாம்

கொழும்பு, ஜூன் 13

நேற்று 8 மாவட்டங்களில் மழை பெய்தது. பருவப் பெயர்ச்சிக் காற்றே இதற்குக் காரணம் ஆகும்.

பிரஸ்தாப மாவட்டங்களில் இன்றும் காற்றுடன் கூடிய மழை பெய்யும் என்று, கொழும்பு கால நிலை அவதான நிலையத்தின் பணிப்பாளர் திரு. ஜே. டி. அருளானந்தன் தெரிவித்தார்.

ஆகக் கூடுதலான மழை வீழ்ச்சி இரத்தினபுரி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

நேற்றுக் காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் பதிவு செய்யப்பட்ட மழை வீழ்ச்சி விவரம் வருமாறு:—

இரத்தினபுரி, குருவிட்ட, அம்பந்தோட்டை ஆகிய பகுதிகளில் தலா 39 மில்லி மீட்டர்; கொழும்பு — 36 மி. மீ., இரத்மலானை — 29 மி. மீ., கட்டுநாயக்கா — 14 மி. மீ., நுவரெலியா — 8 மி. மீ., கண்டி — 5 மி. மீ., குருநாகல் — 2 மி. மீ.

(த-11)

## நோன்பு தொழுகை நேரம்

13—6—1984

| | | |
|---|---|---|
| ஸஹர் முடிவு | — | காலை 4.19 |
| ஸுபஹு | — | காலை 4.34 |
| சூரிய உதயம் | — | காலை 5.54 |
| ளுஹர் | — | பகல் 12.20 |
| அஸர் | — | பிற்பகல் 3.37 |
| மஃரிபு | — | மாலை 6.26 |
| இஷா | — | இரவு 7.46 |

றைகம் தோட்ட விவகாரம்:

## தனிநபர் விசாரணை நடத்த இணக்கம்

### வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

கொழும்பு, ஜூன் 13

இங்கிரியா றைகம் தோட்ட தொழிலாளி பொலீஸாரினால் தாக்கப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக தனிநபர் விசாரணை நடத்தப்படும்.

அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்துக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையில் ஏற்பட்ட சமரச முடிவைத் தொடர்ந்து மூன்று வாரமாக நடைபெற்ற வேலை நிறுத்தம் கைவிடப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனத்துடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பேச்சுவார்த்தை நடத்தியது.

அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்திலும் ஹொரனை பிராந்திய அலுவலகத்திலும் கடந்த 5ஆம் 6ஆம் திகதிகளில் தொடர்ந்து இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் திரு. ரஞ்சன் விஜேரத்ன தலைமையில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில், ஹொரனை பிராந்திய முகாமையாளர் திரு டயஸ் அபேசிங்க, தோட்டத்துரை திரு சில்வா, இ. தொ. கா. சார்பில் பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி தொழிலுறவு இயக்குநர் திரு. எஸ். ரெங்கநாதன், உபதலைவர் திரு. ஜெயா பெரிசுந்தரம், இங்கிரியா, மாவட்டப் பிரதிநிதி திரு. ஆர்- ஜீ- சுந்தரம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(த-ய)

## மாத்தறையில் தொலைபேசி கம்பி திருட்டு அதிகரிப்பு

மாத்தறை, ஜூன். 12

இரவு வேளைகளில் தொலை பேசிக் கம்பிகள் களவாக வெட்டப்படுவது மாத்தறை மாவட்டத்தில் அதிகரித்து வருகிறது.

அண்மையில் மாத்தறை — கந்தறை பாதையில் சுமார் 560 யார் நீளமான தொலை பேசிக் கம்பி களவாடப்பட்டிருக்கிறது.

கடந்த இரு மாதங்களில் மாத்தறை மாவட்டத்தில் 5000 யார் தொலை பேசிக் கம்பிகள் களவு போயிருப்பதாக தபால் தந்திச் சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

(த-25)

# ஜூலையில் பாதிக்கப்பட்டோருக்கு ரூ. 7 கோடி நோர்வே நன்கொடை

கொழும்பு, ஜூன் 13

கடந்த வருடம் ஜூலைக் கலவரங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர் வாழ்வு அளிப்பதற்காக, நோர்வே அரசின் "நோராட்" நிறுவனம் ஏழு கோடி ரூபாவை நன்கொடையாக வழங்கியிருக்கிறது.

திங்கட்கிழமை காலை புனர்வாழ்வு அமைச்சில், மேற்படி நிதி உதவி சம்பந்தமான

(8ஆம் பக்கம் பார்க்க)

## 5ஆம் தர புலமைப் பரிசில் விண்ணப்பப் படிவத்தில் தமிழ் சொற்பிழைகள்

கொழும்பு, ஜூன் 13

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய விண்ணப்பப் படிவங்களில், பல தமிழ்ச் சொற் பிழைகள் காணப்படுகின்றன என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

★ "பல சோடி விண்ணப்பப் படிவங்களை" என்பதற்குப் பதிலாக, "பல சோடி சோடி விண்ணப்பப் படிவங்கள்" எனவும் —

★ "பரீட்சைக்குத் தோற்றும் நோக்கம்" என்பதற்கு பதிலாக, "தேற்றும் நோக்கம்" எனவும் —

★ "ஆங்கிலத்தில் மாத்திரம் பதியப்பட வேண்டும்" என்பதற்குப் பதிலாக, "ஆங்கிலத்தை மாத்திரம்" எனவும் அச்சிடப்பட்டுள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக "பாடசாலைத் தலைவரது கையொப்பம்" என்பது, "பரீட்சைத் தலைவரது கையொப்பம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(த)

## துருக்கி கப்பலில் ஒளிந்திருந்த இலங்கையர்கள் கைது

கொழும்பு, ஜூன் 13

கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்ற துருக்கிக் கப்பல் ஒன்றுக்குள் ஏறி ரகசிமாக ஒளித்திருந்த மூன்று இலங்கையர்கள் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் மூவரும் பாஸ்போட் வைத்திருந்தனர். இவர்களில் ஒருவர் கப்பலின் புகைபோக்கியில் மறைந்திருந்தார்.

கொழும்புத் துறைமுக பொலீஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி திரு. நோயல் பிரான்ஸிஸ் விசாரணை நடத்தி வருகிறார்.

(த-மு)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# தேயிலை ஏற்றுமதி மூலம்

# ரூ. 15 கோடி

## இந்த ஆண்டு எதிர்பார்ப்பு

கொழும்பு, ஜூன் 13

தேயிலை ஏற்றுமதி மூலம் 1984 ஆம் ஆண்டு இறுதிக்குள் 12 கோடி முதல் 15 கோடி ரூபா வரை அந்நியச் செலாவணியாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனவரி முதல் மார்ச் வரையிலான முதல் மூன்று மாதங்களில் மட்டும் நடைபெற்ற தேயிலை ஏற்றுமதியின் மூலம் மூன்று கோடியே 90 லட்ச ரூபாவை அந்நியச் செலாவணியாகப் பெற்றிருப்பதாக திறைசேரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வருட இறுதிக்குள் சுமார் 200 லட்சம் கிலோகிராம் தேயிலையை ஏற்றுமதி செய்ய முடியும். இது சென்ற 1983 ஆம் வருட ஏற்றுமதியை விட 40 லட்சம் கிலோ கிராமால் அதிகரித்திருப்பதாக தேயிலை ஏற்றுமதி வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றன.

இந்திய அரசாங்கம் தேயிலை ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு விதித்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கைத் தேயிலைக்கு உலக சந்தையில் நல்ல கிராக்கி இருக்கிறது. கடந்த வருடத்தைவிட இவ்வருடம் விற்பனை திருப்தியாக இருப்பதாகவும் தேயிலை ஏற்றுமதியில் ஈடுபட்டிருக்கும் நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(எ—ய)

# பொசனையொட்டி உணவுப் பொட்டலங்கள் கொழும்பில் விநியோகம்

## தி. கூட்டுத்தாபன ஊழியர் ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 13

இன்று புனித பொசன் தினத்தை முன்னிட்டு கொழும்பு நகரெங்கும் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்படும்.

இலங்கை அரச திரைப்பட கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரும் இன, மத, மொழி பேதமின்றி கூட்டாக இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றனர்.

அரச திரைப்பட கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் தமிழ், சிங்கள, முஸ்லிம் ஊழியர்கள் அனைவரும் கூட்டாக மேற்கொண்டிருக்கும் இந்த முயற்சி பாராட்டுக்குரிய ஒன்றெனக் கூறப்படுகிறது.

(எ—ய)

# பொய் பிரசாரங்களிலிருந்து மீட்சி பெற வழி என்ன?

## லலித் விளக்கம்

கண்டி, ஜூன் 12

"கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற சம்பவங்களால் பொய்ப் பிரசாரங்களின் மூலம் உலக நாடுகளில் எமது நாட்டைப் பற்றி தவறான அபிப்பிராயங்கள் எழுந்தன. அது போன்ற பிரசாரங்களால் இருந்தும் நாம் காப்பாற்றப்பட வேண்டுமாயின் நாட்டில் ஜூலை சம்பவம் போன்ற வேறு ஒன்று இடம்பெற இடமளிக்கக் கூடாது."

இப்படிக் கூறினார் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி.

வத்தேகம மத்திய கல்லூரியில் இறுதி நாளன்று நடைபெற்ற 88 ஆவது மகாபொல கொண்டாட்ட நிகழ்ச்சிகளில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து பேசிய அமைச்சர் கூறியதாவது:

இலங்கைக்கு எதிராக உலகம் பூராவும் தவறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை நாம் எல்லோரும் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு சிறிய சம்பவம் கூட பெரிதுபடுத்திக் காட்டப்படுகின்றது." ...ருந்தது. இதற்குக் காரணம் சுயநலத்துவ மக்களின் அனுதாபத்தை பயங்கரவாதிகள் பெற்றும் பொருட்டே ஆகும்.

இலங்கையை பிரித்து தனிநாட்டை ஏற்படுத்த வேண்டும் என்றும் பொய்ப் பிரசாரங்கள் செய்யப்பட்டிருந்தன. இருப்பினும் நான் உண்மையைத் தெளிவுபடுத்தியதுடன் இலங்கைத் தமிழரை ஏற்காது போனால் அதன் உழைப்புக்கு உதவும் அப்பாவி தமிழ் மக்களே பட்டினியால் பாதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்தேன். இதனைத் தொடர்ந்து அந்தப் பிரசாரமும் முறியடிக்கப்பட்டு விட்டது.

கடந்த ஜூலை சம்பவங்களின் போது பௌத்தர்கள் தமிழர்களைக் கொல்லுகிறார்கள் என லண்டனில் பிரசாரம் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து உண்மை நிலையை அறியுமாறு நாம் பிரிட்டனில் உள்ள சகல அரசியற் கட்சிகளினதும் பிரதிநிதிகளை வருமாறு அழைப்பு விடுத்தோம்.

அவர்கள் வந்தார்கள். யாழ்ப்பாணம் சென்றார்கள். அங்கு மக்களோடு கலந்து பேசினார்கள். இது போன்ற ஒரு சம்பவம் நாட்டில் இனிமேலும் ஏற்படாதிருக்க சகல ஏற்பாடுகளும் ...

திரமே இருக்கின்றதென கருதுவது பொருத்தமில்லை.

இலங்கையில் பிறந்து, வளர்ந்து தொழில் புரிந்து இறுதியில் இந்நாட்டு மண்ணிலேயே மடியக் காத்திருக்கும் அனைவரும் நாட்டைக் காப்பது கடமையாகும்.

எவ்வாறு இருந்த போதிலும் நாம் இப்பொழுது மேற்கொண்டுள்ள சகல முயற்சிகளிலும் குறிப்பாக நாட்டுப் பிரிவினையைக் கோரும் பயங்கரவாதிகளின் திட்டங்களையும் முறியடித்து வெற்றிபெறுவது நிச்சயம்."

இப்படி அவர் கூறினார்.

(எ–105)

## இடம் மாறியது

வவுனதீவு, ஜூன் 12

மட்டக்களப்பு சத்துருகொண்டான் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் கோழிப் பண்ணையில் இது வரை காலமும் இயங்கி வந்த அகதிகள் முகாம் அமைச்சின் கைத்தொழிற் பேட்டை கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

அமைச்சின் கோழிப்பண்ணைக் கட்டடம் எதிர்வரும் 17 ஆம் திகதி திறக்கப்பட விருப்பதையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

(எ–318)

# கிண்ணியாவில் மக்கள் வங்கி நடமாடும் சேவை

கொழும்பு, ஜூன் 13

கிண்ணியா பிரதேசத்துக்கு மக்கள் வங்கியின் நடமாடும் சேவை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதன்பின் கடந்த ஏப்ரல் மாதம் கிண்ணியா மக்கள் வங்கியில் நகை அடைவு வைத்தோர் வாடிக்கையாளர் சங்கத்தினர் பிரதி நிதி, திட்டமிடல் அமைச்சர் ஜனப் நைனா மரிக்காரை ...

# பண வீக்கத்தை குறைப்பதற்கு "ஸ்திரப்படுத்தல் நிதியம்"

## அமைக்கப்படும் என ரொனி தகவல்

கொழும்பு, ஜூன் 13

பண வீக்கத்தைக் குறைப்பதற்கான அரசின் துரித நடவடிக்கைகளுள் ஒன்றாக "ஸ்திரப்படுத்தல் நிதியம்" ஒன்று ஏற்படுத்தப்படும்.

நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி. மெல் இத்தகவலைத் தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிற்துறை மற்றும் ஏனைய துறைகளில் காணப்படும் மேலதிக திரவ நிலைப் பணத்தொகை யாவும் இந்த நிதியத்துக்குச் செலுத்தப்பட வேண்டும்.

மத்திய வங்கி இது தொடர்பான கட்டாய உத்தரவொன்றை இத்துறையில் உள்ளவர்களுக்கு விடுக்கவிருக்கிறது.

பிரஸ்தாப நிதியம் தொடர்பான சகல விவரங்களும் தற்போது மத்திய வங்கியால் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

பண விநியோகத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே, பாவனைப் பொருள்களின் தற்போதைய விலையுயர்வுக்குக் காரணமாகும்.

மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் டி. மெல் பண வீக்கத்தைக் குறைக்கும் மற்றொரு நடவடிக்கையாக,

பாரம்பரிய பொருள்கள் விடயத்தில் ஏற்றுமதித் துறைக்கு வழங்கப்படும் மானிய நிதிவழங்கலும் கட்டுப்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

(எ–8)

## முகம்மது மூன்று மாவட்டங்களுக்கு விஜயம்

மாத்தறை, ஜூன் 12

போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது எதிர்வரும் 17 ஆம் திகதி மாத்தறை, அம்பாந்தோட்டை, காலி ஆகிய மாவட்டங்களுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்வார்.

இம் மாவட்டங்களிலுள்ள தம்ம பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமை புரியும் ஆசிரியர்கள் ஞாயிறு தோறும் தமது பாடசாலைகளுக்குச் சென்று, திரும்பி வர இலவச பஸ் பிரவேசப் பத்திரங்களை வழங்கும் பொருட்டே அமைச்சர் இந்த விஜயத்தை மேற் கொள்கிறார்.

அம்பாந்தோட்டை மாவட்ட வைபவம் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு திஸ்ஸமஹாராமை, ரஜமஹா விகாரை முற்ற வெளியில் நடைபெறும்.

மாத்தறை மாவட்ட வைபவம் அதே தினம் பிற்பகல் 2.00 மணிக்கு மாத்தறை மன்திந்த பிரிவெனாவிலும், காலி மாவட்ட வைபவம் அதே தினம் 4.00 மணிக்கு காலி மாநகரசபை முற்ற வெளியிலும் நடைபெறும்.

(எ–25)

# பண்டாரவளை கல்வி திணைக்கள நடவடிக்கையால் மாணவர் பெரிதும் பாதிப்பு

பண்டாரவளை, ஜூன் 12

பண்டாரவளை தமிழ்க் கல்வி வட்டாரத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் போது பண்டாரவளை பகுதியில் உள்ள ஆசிரியர் பதுளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். பண்டாரவளை கல்வித் திணைக்களம் இவ்வாறு ... வெகுவாகப் பாதிக்கப்படுகிறது.

பண்டாரவளை தமிழ் கல்வி வட்டாரத்தில் 382 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது.

இதேவேளையில் பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிக ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர் எனக் கூறி விஞ்ஞான உதவி ஆசிரியர் ஒரு ...

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்





மொஹமெட் முபா(F)ரிஸ்

யாழ்ப்பாணம், இல. 4, (33), லெப்பை லேனைச் சேர்ந்த ஜவ்பர் — றிஹானா தம்பதிகளின் செல்வப் புதல்வன் மொஹமெட் முபா(F)ரிஸ் தனது பிறந்த நாளை குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை வாப்பா, உம்மா, ப(F)யாஸ் நானா, சிருஜ் மாமா, உம்மும்மா, வாப்பச்சி, அப்பாமார் ஆகியோருடன் பெரியப்பாமார், பெரியம்மாமார், சாச்சாமார், காக்காமார், ராத்தாமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சிமார் ஆகியோருடன் நடேஸ் மாமாவும், அன்புடன் பல் கலைகளும் பெற்று பல்லாண்டு வாழ வேண்டுமென இறைவனை வேண்டி வாழ்த்துகிறார்கள்.

032452

தினபதி சிறு விளம்பரம்

## பத்று மௌலூத்

பத்று மௌலூத், புர்தா ஷரீப் பதிவு செய்யப்பட்ட கஸட்கள் விற்பனைக்கு உண்டு.
Twinkle, P 1, Front Street, Colombo 11.

032033

## இஸ்லாமிய கீதம்

திருக்குர்ஆன், புர்தா ஷரீப், பத்று மௌலூத், முஹியத்தீன் மாலை, ஐயூப் நபி, யூசுப் நபி, பிலால் (ரலி) சரித்திரம், நோன்பின் சிறப்பு, நூறு மஸாலா, காரைக்கால் தாவூத் ஈ. எம். ஹனீபா, சேக் முஹம்மது, ஹுஸைன்தீன் மற்றும் பலர் பாடிய இஸ்லாமிய கீதங்கள், நாயகத்தின் பிறப்பின் சிறப்பு போன்றவை, பதிவு செய்யப்பட்ட கஸட்கள் வாங்க சிறந்த இடம்.
Twinkle, P 1. Front Street. Colombo 11.

வி. இ. 031342

---

பூராவும் தவறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை நாம் எல்லோரும் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு சிறிய சம்பவம் கூட பெரிதுபடுத்திக் காட்டப்படுகின்றது.”

“யாழ் நகரில் உள்ள ஒரு கிறிஸ்தவ ஆலயத்தின் ஜன்னல் ஒன்றின் மீது பயங்கரவாதிகளை எதிர்த்து போரிட்ட இராணுவ வீரர்களினால் சிறிய சேதம் ஒன்று ஏற்பட்டது.

இது உலக நாடுகளுக்கு பெரிதுபடுத்திக் காட்டப்பட்டி

அவர்கள் வந்தார்கள், யாழ்ப்பாணம் சென்றார்கள். அங்கு மக்களோடு கலந்து பேசினார்கள். இது போன்ற ஒரு சம்பவம் நாட்டில் இனிமேலும் ஏற்படாதிருக்க சகல ஏற்பாடுகளையும் நாம் மேற்கொண்டிருப்பதாக அவர்களிடம் தெரிவித்தோம். இது குறித்து அரசாங்கத்தை அவர்கள் பாராட்டினார்கள்.

“இந்நாட்டைப் பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்பு ஆட்சியாளர்கள் மத்தியில் மாத்

# வளர்முக நாடுகள் எமக்கு உதாரணமாக அமையவேண்டும்

## — அப்புஹாமி

பண்டாரவளை, ஜூன் 12

“வளர்முக நாடுகளின் முன்னேற்றத்திற்கு அந்நாட்டு மக்களின் கடின உழைப்பும், ஐக்கியமுமே காரணமாகும். அப்பேர்ப்பட்ட மனப்பான்மை எமது உள்ளங்களிலும் ஏற்பட வேண்டும். நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு அனைவரும் ஐக்கியப்பட வேண்டும்.”

இவ்வாறு கூறினார் பதுளை மாவட்ட அமைச்சரும், பண்டாரவளை எம். பி. யுமான திரு. ஆர். எம். அப்புஹாமி.

பண்டாரவளை தொகுதியைச் சேர்ந்த மீரியகஹா என்ற இடத்தில் நடைபெற்ற கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மாவட்ட அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

நாட்டின் பொருளாதார வளர்ச்சிகு இன, மத, கட்சி வேறுபாடுகள் தடைக் கல்லாக இருக்கக் கூடாது ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் அரசாங்கம் மேற்கொண்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களினாலேயே நாடு சகல துறைகளிலும் தன்னிறைவு காணவுள்ளது.

இதற்கு நாட்டு மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்பும், கடின உழைப்பும் தேவை.

கிராமப் புறங்களின் முன்னேற்றத்திற்கு இந்த அரசாங்கம் செய்துள்ள சேவைகளைப் போல் வேறு எந்த அரசாங்கமும் செய்ததில்லை.

பண்டாரவளை தேர்தல் தொகுதியில் கடந்த நாற்பது வருடங்களாக செய்யாத வேலைத் திட்டங்களை நான் செய்து இருக்கிறேன். எனது வேலைகளைக் கண்டு பொறாமைப் படாது மேலும் எனக்கு சேவை செய்ய ஆதரவும், ஒத்துழைப்பும் தாருங்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

(எ—39)

---

கிண்ணியா பிரதேசத்துக்கு மக்கள் வங்கியின் நடமாடும் சேவை ஏற்படுத்திக் கொடுக்கப்பட இருக்கிறது.

இதேவேளையில் முன்னர் மூடப்பட்ட இலங்கை வங்கியின் கிளை விரைவில் மீண்டும் திறக்கப்பட உள்ளது.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி இந்த உறுதியை அளித்திருக்கிறார்.

மூதூர் எம். பியும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப், எம். ஈ. எச் மஹ்ரூப் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் கிண்ணியா மக்கள் வங்கியில் இடம் பெற்ற வங்கிக் கொள்ளையை அடுத்து இப் பிரதேசத்தில் இருந்த சகல வங்கிக் கிளைகளும் மூடப்பட்டன.

இதனைத் தொடர்ந்து கிண்ணியாப் பகுதி மக்கள் பல சிரமங்களை அனுபவிக்க வேண்டி ஏற்பட்டது.

மூதூர் கடல்வழிப் பாதையைக் கடந்து சென்று, திருகோணமலை வங்கிகளில் தமது கருமங்களை செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டதால் இவர்கள் பாதிக்கப்பட்டனர்.

மாதம் கிண்ணியா மக்கள் வங்கியில் நகை அடைவு வைத்தோர் வாடிக்கையாளர் சங்கத்தினர் பிரதிநிதி, திட்டமிடல் அமைச்சர் ஜனாப் நைனா மரிக்காரை ஜனாப் மஹ்ரூப் தலைமையில் சந்தித்தனர்.

இதையடுத்து மூடப்பட்ட வங்கிக் கிளைகளை மீண்டும் திறப்பதாக அவர் உறுதி அளித்தார்.

எனினும் பாதுகாப்புக் காரணங்களால் இது ஒத்திவைக்கப்பட்டு வந்தது.

இதனைத் தொடர்ந்து மேற்படி சங்கத்தினர் ஜனாப் மஹ்ரூப் தலைமையில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியைக் கடந்த வாரம் கொழும்பில் சந்தித்தனர்

அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி, மக்கள் வங்கியை மீண்டும் கிண்ணியாவில் திறப்பதற்குப் பதிலாக,

திருமலையிலிருந்து கிண்ணியாவுக்கு மக்கள் வங்கியின் நடமாடும் சேவையை ஏற்படுத்தித் தருவதாக உறுதியளித்திருக்கிறார்.

எனினும் மூடப்பட்ட கிண்ணியா இலங்கை வங்கிக் கிளை விரைவில் மீண்டும் திறக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

(எ—8)

---

லளை பகுதியில் உள்ள ஆசிரியர் பதுளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். பண்டாரவளை கல்வித் திணைக்களம் இவ்வாறு கண்மூடித்தனமாக நடப்பதால் இப்பகுதி மாணவர்களது கல்வி

## மொனராகலையில் தொற்றுநோய் அபாயம்

கொழும்பு, ஜூன் 13

மொனராகலை மாவட்டத்தில் மீண்டும் தொற்று நோய் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

அண்மைக் காலமாக அப்பகுதியில் பெய்த கடும் மழையினால் கிணறு, குளம், கால்வாய் ஆகியவற்றிலுள்ள நீர் அசுத்தமடைந்திருந்தன.

சுகாதார முறைகளின்படி நீரைக் கொதிக்க வைத்து அருந்தாததாலேயே காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற நோய்கள் பரவி வருகின்றன.

நோய்ப் பாதிப்புக்குள்ளான ஒருவர், மொனராகலை மாவட்ட ஆஸ்பத்திரியில் இறந்து விட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

(எ—11)

---

இதேவேளையில் பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிக ஆசிரியர்கள் கருமமாற்றுகின்றனர் எனக் கூறி விஞ்ஞான உதவி ஆசிரியர் ஒருவருக்கு பதுளை சரஸ்வதி மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருக்கிறது.

பண்டாரவளை தமிழ் கல்வி வட்டாரத்தில் உள்ள பல தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் பல வருடங்களாக விஞ்ஞான ஆசிரியர் ஒருவர் இல்லாமல் மாணவர்கள் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றனர்.

(எ—39)

## இந்தியப் பிரஜை விமான நிலையத்தில் கைது

கொழும்பு, ஜூன் 13

சட்ட விரோதமான முறையில் பதினைந்து பவுண் தங்கத்தையும், “வீடியோ டெக்”, உட்பட இன்னும் சில உபகரணங்களையும் கடத்திச் செல்ல முற்பட்டதாகக் கூறப்படும் இந்தியப் பிரஜை ஒருவர், கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பகுதியினரால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருள்களின் முழுப் பெறுமதி 75,000 ரூபாவென சுங்கப் பகுதியினர் தெரிவித்தனர்.

மேற்படி நபர் சுமார் ஒரு வாரத்திற்கு முன்பு வியாபார நோக்கத்திற்காக இலங்கைக்கு வந்துள்ளார் என விசாரணையில் இருந்து தெரிய வந்திருக்கிறது.

இவருக்கு 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(எ—ர)

# சிறைச்சாலை அதிகாரியை உடன் ஆஜர் செய்ய உத்தரவு

கொழும்பு, ஜூன் 13

நீதிமன்றத்திற்கு ஆஜராகத் தவறிய சிறைச்சாலை அதிகாரியை உடனடியாக ஆஜர் செய்யும்படி கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி களனி, பட்டிய சந்தியில் ஹேமச்சந்திர ஸ்டோர்ஸ் உரிமையாளர் எம். எல். எம். அப்புகாமி என்பவர் கொலை செய்யப்பட்டார், அவரிடமிருந்த 33 ஆயிரத்து, 370 ரூபா ரொக்கப் பணமும் இதர தங்க ஆபரணங்களும் கொள்ளையடிக்கப்பட்டன.

இது தொடர்பாக ஹெரத் முதியன்சலாகே கருணாரத்ன என்பவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

மேற்படி சந்தேகநபரை, நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்யத் தவறியதினால், ஐந்துமுறை கோர்ட் அறிவித்தல்களும் ஐந்து (பிடியாணை) வாரண்ட் உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு உத்தரவுகளும், வாரண்டும். பிறப்பிக்கப்பட்ட போதிலும், நீதிமன்றத்திற்கு சமுகமளிக்கத் தவறியதால் கோர்ட் கலையும் முன் மேற்படி சிறைச்சாலை அதிகாரியை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தும்படி மேலதிக நீதிவான் உத்தரவிட்டார்.

(ஈ—ய)

## பாடசாலைக் கூரை சரிந்ததால் ஆசிரியை காயம்

வெயாங்கொடை, ஜூன் 12

கம்பஹா, மாகவிடை எனும் கிராமத்தில் இருக்கும் பாலர் பாடசாலையொன்றின் கூரை உடைந்து விழுந்தது. இதனால் பாடசாலைப் பொறுப்பாசிரியை படுகாயமுற்றுக் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

தலையில் ஏற்பட்ட பலத்த அடி காரணமாக இவர் உடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் சிகிச்சைபெற்று வருகின்றார்.

(எ—320)

# பொலீஸ் அதிகாரிகள் போன்று நடித்தவர்கள் கைது

## இளைஞரையும் கடத்தினராம்

மாவனல்லை. ஜூன் 12

பொலிஸ் அதிகாரிகளைப் போல் நடித்து பெற்றோலையும் நரப்பிக கொண்டு, பெற்றோல் நிலையத்தில் பணிபுரிந்த 21 வயது வாலிபர் ஒருவரையும் கடத்திச் சென்றதாக சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

அங்வாரம பெற்றோல் நிலையத்திற்கு ஒரு வானில் வந்த இருவர், தாம் பொலீஸ் அதிகாரிகள், எனக் கூறி, முந்நூறு ரூபாவுக்கு பெற்றோல் நிரப்பினராம்.

அத்துடன் பெற்றோலுக்கான “பில்”லைக் கொண்டு வந்த வாலிபரை பலாத்காரமாக வானில் போட்டுக் கடத்தி கொழும்பு நோக்கி வந்துள்ளனர்.

கடத்தப்பட்ட வாலிபரின் முகத்தில் மயக்க மருந்து தடவிய கைக் குட்டையால் அழுத்தி, மயங்கவும் செய்துள்ளனர். அவருக்கு சுய நினைவு திரும்பும் போது வான் கொழும்பை நெருங்கிக் கொண்டிருப்பதை அவர் உணர்ந்திருக்கிறார்.

நினைவு திரும்பியபோது, தாம் கடத்திக் கொண்டுபோவதை உணர்ந்த அவர் வானின் கதவைத் திறந்து கொண்டு வெளியே பாய்ந்து தப்பியுள்ளார்.

பின்னர் மாவனல்லை பொலீஸ் நிலையத்திற்கு வந்து, தாம் கடத்தப்பட்டது பற்றிப் புகார் செய்துள்ளார்.

மாவனல்லை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சரத் பெத்தவலயின் பணிப்பின் பேரில், சார்ஜண்ட் சமரபால, கான்ஸ்டபிள் பிரேமரத்ன, கொழும்பில் சென்று விசாரணைகளை நடத்தினர்.

விசாரணையின் பின், வாலிபரைக் கடத்தியதாக, வை. எம். இக்பால், சொக்கலிங்கம் ஆகிய இருவரையும் சந்தேகத்தின் பேரில் பொலீஸார் கைது செய்தனர். வாலிபரைக் கடத்தப் பயன் பட்ட வானையும் அவர்கள் கைப்பற்றினர்.

சந்தேக நபர்கள் இப்போது பொலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

## வித்தியாலய கட்டடம் நாளை திறப்பு

புங்குடுதீவு சேர் துரைசுவாமி வித்தியாலயத்தின் புனரமைக்கப்பட்ட கட்டடம் நாளை 14 ஆம் திகதி மாலை திறந்து வைக்கப்படும்.

வட்டாரக் கல்வியதிகாரி திரு. சி. இராசநாயகம் இதனைத் திறந்துவைப்பார். புங்குடுதீவு வட்டாரக் கல்வியதிகாரி திரு. க. குகதாசன் உட்படப் பல பிரமுகர்கள் இவ் வைபவத்தில் கலந்து கொள்வர்.

பிரஸ்தாப வித்தியாலயத்தில் நீண்ட காலம் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. ஐ. கதிர்காமலிங்கம் இவ் வைபவத்தில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் படுவார்.

(எ—240)



சிவகுமாரின் நெஞ்சத்தில் இடம் கேட்கிறாரோ ராதிகா?
(படம்: நிலவு சுடுவதில்லை)

# கைப்பணிப் பொருள் உற்பத்திக்கு ஊக்கம்

## தொண்டமான் வாக்குறுதி

கொழும்பு, ஜூன் 13

கைப்பணிப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்களை ஊக்குவிக்கவும், தரமான பொருட்களை உற்பத்தி செய்யவும் கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சும், அதன் கீழ் இயங்கும் சகல திணைக்களங்களும் எல்லா உதவிகளையும் வழங்கத் தயாராக உள்ளன.

கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு.எஸ். தொண்டமான் இவ்வாறு உறுதியளித்தார்.

கொழும்பு கலாபவனத்தில் அண்மையில் நடைபெற்ற கைப்பணிப் பொருட்கள் உற்பத்தியாளர்களுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு அமைச்சர் தொண்டமான் பரிசுகளை வழங்கினார்.

இப்போட்டியை, ஸ்ரீலங்கா தேசிய அலங்கார வடிவமைப்பு நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.

அமைச்சர் தொண்டமான் அங்கு தொடர்ந்து பேசும் போது குறிப்பிட்டதாவது:–

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் கைப்பணிப் பொருட்களுக்கு – குறிப்பாக பிரம்பினால் செய்யப்படும் அலங்கார பெட்டிகளுக்கு பெரும் வரவேற்பு ஏற்பட்டிருக்கிறது.

பிறநாட்டு உல்லாசப் பிரயாணிகளைக் கவரக் கூடிய வகையில் தரமான, உறுதியான பொருட்களை உற்பத்தி செய்தால் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து பெரும் லாபம் பெற முடியும்.

கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்பவர்களுக்கு எனது அமைச்சும், அதன் கீழ் இயங்கும் சகல திணைக்களங்களும் உதவத் தயாராக உள்ளன.

கைப்பணியாளர்கள் தனித்து செயற்படாமல், தம்மத்தியில் கூட்டு அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் தங்களுடைய வருமானத்தில் ஒரு ஸ்திரமான நிலையை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

இவ்வாறு திரு. தொண்டமான் கூறினார்.

இவ்வைபவத்தில் ஸ்ரீலங்கா தேசிய அலங்கார வடிவமைப்பு நிலையத்தின் தலைவர் திரு. வேர்ணன் பீரிஸும் பேசினார்.

(ல–ய)

# மக்களுக்காகப் போராடும் பொலீஸாருக்கு உதவுங்கள்

## நல்லுறவுக் கூட்டத்தில் வேண்டுகோள்

பொத்துவில், ஜூன் 13

பொது மக்களுக்காக பொலீஸார் இரத்தம் சிந்துகின்றார்கள். தமது உயிரையே பணயமாக வைத்து போராடுகின்றார்கள். ஆனால் பொது மக்கள் பொலீஸாருக்கு உதவ முன் வராதது ஏன்? பொது மக்கள் பொலீஸாருக்கு ஒத்துழைப்பு தந்து உதவ வேண்டும்.

இவ்வாறு கிழக்குப் பிராந்திய பிரதி பொலீஸ் மா அதிபர் திரு. கிங்ஸ்லி விக்ரமசூரிய கூறினார்.

பொலீஸ் – பொது மக்கள் நல்லுறவு கூட்டம் அண்மையில் பொத்துவில் மெ. மி. த. க. வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு கிழக்குப் பிராந்திய பொலீஸ் அத்தியட்சகர் திரு. விக்டர் பெரேரா தலைமை வகித்தார்.

பொத்துவில் பிரதேச சபைத் தலைவர் அல்ஹாஜ் காசிம் மௌலவி, கல்முனை உதவி பொலீஸ் அத்தியட்சகர் திரு. எஸ். நவரட்னராசா, பொத்துவில் பொலீஸ் நிலையப் பொறுப்...

... பொலீஸாரிடத்தில் தவறுகள் ஏற்பட்டால் பொது மக்கள் மன்னித்து உதவி நல்க வேண்டும்.

1948ஆம் ஆண்டிற்குப் பின் எம்மை நாமே ஆண்டு அனுபவிக்கும் சுதந்திரம் பெற்றோம். எம்மைப் பொறுத்த வரை அரசியல் சுதந்திரம் கிடைத்து விட்டது.

பொருளாதார அபிவிருத்தியை நாம் இன்னும் அடையவில்லை.

எமது நாடு சிறியது. பொருளாதாரம் சிறப்பாக இல்லை. பொருளாதாரத்தை மேம்படுத்த பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

1950ஆம் ஆண்டிலிருந்து இனக்கலவரங்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. அபிவிருத்தி அடையாத நாடுகளில் இவ்வாறான இனப் பிரச்சினைகள் ஏற்படுவதுண்டு.

இது பொருளாதாரத்தோடு சம்பந்தப்பட்ட புரட்சி என்றே கருத வேண்டும். இப்பிரச்சினையை ஒழிக்க வேண்டும்.

சமாதானம் நீதி என்பவற்றிற்கு பொலீஸார்தான் சொந்தக்காரர் அல்ல. பொது மக்...

... இடைவெளி இருக்கக் கூடாது.

பொலீஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையிலுள்ள பாலமே இந்த நல்லுறவு இயக்கமாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நல்லுறவு இயக்க செயலாளர் ஜனாப் எம். ஐ. காதர்முகைதீன் நன்றியுரை கூறினார். மெ. மி. வித்தியாலய மாணவியர் சிற்றுண்டி, குளிர்பானம் என்பன வழங்கினர்.

(ல–247)

## மோசடி செய்த நபர் கைது

மத்திய கிழக்கில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி ஒரு இளைஞரிடம் 20 ஆயிரம் ரூபா பெற்று நம்பிக்கை மோசடி செய்ததாக நபர் ஒருவரை மட்டக்களப்பு பொலீஸார் கைது செய்தனர்.

முனைக்காடுவாசி ஒருவரே இவ்வாறு கைதானார்.

மட்டக்களப்பு விசேட குற்றத் தடுப்பு பொலீஸ் பிரிவைச் சேர்ந்த திரு. எஸ். ரவீந்திரராஜா இவரைக் கைது செய்தார்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் திரு. ரி. யேசுரத்தினம் முன் அவர் ஆஜர் செய்யப்பட்ட போது நீதிபதி அவரை பிணையில் செல்ல அனுமதித்தார்.

(ல–318)

# "நான் முற்றும் துறந்த முனிவன் அல்லன்"

## ரஜனிகாந்த் கூறுகிறார்

"எனக்கு கடவுள் நம்பிக்கை உண்டு. ஆயினும் நான் முற்றும் துறந்த முனிவன் அல்ல" என்கிறார், நடிகர் ரஜினிகாந்த்.

பட உலகம் பற்றிய உண்மைகளை மனம் திறந்து கூறுகிறார்:

கடவுள் உண்டு என்ற நம்பிக்கை என் இதயத்தில் என்றும் உண்டு. அவன் இல்லையேல் அணுவும் அசையாது. என்பதையும் நம்புகிறேன். ஆனால் அவன் பெயரைச் சொல்லி எல்லாம் விதிப்படி நடக்கும் என்று வெட்டி வேதாந்தம் பேசுவதையும் வெறுக்கிறேன்.

பெங்களூர் மார்க்கெட்டில் ஒரு வித பிடிவாதக் குணத்துடன் மூட்டை சுமந்து, அந்தப் பணத்தை வைத்து ஜாலியாக சினிமா பார்த்த அந்த நாட்களும் இறைவன் அமைத்து தந்தவைதான்!

அதே இறைவன்தான் நீயும் ...



ரஜனிகாந்த்

... அடைந்ததில்லை. ரஜனிகாந்த் நடித்த படங்கள் அனைத்துமே வெற்றி பெற்றதில்லை. அதனால் எனக்கு வெறுப்போ, சலிப்போ ஏற்பட்டதுமில்லை.

எந்த ஒரு நடிகர், நடிகை, டைரக்டர், பட அதிபர், மீதும் உள்ளூர கோபமோ வருத்தமோ கொண்டதில்லை.

நான் நடிகன். நான் ஒன்றும் காசு பணம் வாங்காமல் ஓசிக்கு நடிக்கவில்லை. வாங்குகிற பணத்துக்கு என்னால் முடிந்தவரை நடித்துக் கொடுக்க வேண்டும். கால்ஷீட்டு தொல்லை, அது இது என்று சங்கடங்கள் ஏற்படுத்தி அவர்கள் மனசை புண்படுத்தக் கூடாது என்றே நடந்து வருகிறேன்.

பொதுவாக நான் நடிக்கும் படங்களின் கதை எல்லாம் சிறப்பாகவே அமைந்து விடும். படமும் ஓகோ என்று ஓடும் ...

போய் சேர்ந்தால்தான் அவர் ...



ஒரு விந்த பிடிவாதக் குணத்துடன் மூட்டை சுமந்து, அந்தப் பணத்தை வைத்து ஜாலியாக சினிமா பார்த்த அந்த நாட்களும் இறைவன் அமைத்த தந்திரவைதான்!

அதே இறைவன்தான் நீயும் ஒரு சினிமா நடிகளுக வேண்டும், அதற்கான முயற்சியில் ஈடுபடு என்று கட்டளையிட்டவன்.

அவன் கட்டளையை ஏற்காமல் "எல்லாம் அவனவன் தலை எழுத்து" என்று அந்த ஜாலியான நாட்களை விட்டு மாறுமல் இருந்திருந்தால் நான் நடிகளுக இருக்க முடியாது.

கடவுள் கொடுத்த கால் கைகளை வைத்துத்தான் அன்றும் பிழைக்கிறேன். இன்றும் பிழைக்கிறேன். "உழைப்பு ஒன்றே எனது உயிர்" இதுவே எனது லட்சியம்.

இத்தனை ஆண்டுகளாக சினிமா நடிகளுக இருக்கும் நான், இந்த தொழிலை எரிச்சலோ, கசப்போ, விரக்தியோ

**தினபதி சினிமா**

கள் மனதை புண்படுத்தக் கூடாது என்றே நான் வருகிறேன்.

பொதுவாக நான் நடிக்கும் படங்களின் கதை எல்லாம் சிறப்பாகவே அமைந்து விடும். படமும் ஓஹோ என்று ஓடும் என்றும் கூறுவதற்கில்லை.

ஒரு தொழில் என்ருல் அப்படியும் இருக்கும், இப்படியும் இருக்கும்.

ஒரு கதாசிரியரை எடுத்துக் கொள்ளுங்கள். முக்கால்வாசி படம் வளர்ந்த பிறகு கதையை மாற்ற வேண்டும் என்று ஹீரோ கூறினால், கதாசிரியரின் உள்ளம் குமுருதா? வட்டிக்குப் பணம் வாங்கி படம் தயாரிக்கும் பட அதிபர்கள் மனம் நோகாதா?

முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒரு விஷயமும் உண்டு. யாரும் லாபக் கண்ணோட்டத்துடன் படம் தயாரிக்கிருர்களே தவிர, நஷ்டத்தை எதிர்நோக்கி எடுப்பதில்லை. அவர்கள் கண்களுக்கு ஒரு "ஹீரோ"வோ, "ஹீரோயினே", "டைரக்டரோ எப்படி தெரிகிருர்களோ அது போல மற்ற நடிகர்கள், நடிகைகள், தொழில்நுட்ப கலைஞர்களும் தெரிய வேண்டும். அவர்கள் ஊதிய பணமும் சரியாக



ரஜனிகாந்த்

போய் சேர்ந்தால்தான் அவர்கள் வீட்டில் அடுப்பு எரியும்.

நான் இந்தத் துறைக்கு வந்த பின்பு பிற தொழில்களில் உள்ளவர்களை விட மிகுந்த சங்கடத்தில் உள்ள பலரைப் பார்க்கிறேன். ஏதோ வெளிப்பார்வைக்கு பகட்டாக தெரிவார்களே தவிர, உள்ளுக்குள் துயரத்தில் மூழ்கி கிடக்கிருர்கள். 100, 200 படங்களில் நடித்த துணை நடிகர்கள், நடிகைகள் ஒட்டுக் குடிசையிலேயே குடியிருக்கிருர்கள். இவைகளை கவனிக்கும் போதுதான் அவர்களின் ஊதிய விஷயத்திலும் அக்கறை காட்டுகிறேன்.

ஊதியம் பெறுவோர் ஒவ்வொருவரும் ஒரு படம் தயாராகிறதென்ருல் சொந்தப் படமாக எண்ணி நடந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு இரு தரப்பினரும், நடந்து கொண்டாலே இறைவனின் கருணை கிடைக்கும். இல்லை என்ருல் ஒன்றிரண்டு படங்களில் பங்கு பெற்றதுடன் இறைவனே அவர்களை ஒதுக்கி விடுவான். (ஜு—10)

வகித்தார்.

பொத்துவில் பிரதேச சபைத் தலைவர் அல்ஹாஜ் காசிம் மௌலவி, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் திரு. எஸ். நவரட்ணராசா, பொத்துவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜனப் எம். எஸ். எம். இயாஸ் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தனர்.

பிரதி பொலிஸ் மா அதிபர் பேசுகையில் மேலும் கூறியதாவது:

அரசாங்கமும், பாதுகாப்பு இலாகாவும் எவ்வளவோ கஷ்டமான கட்டத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றன.

சம்பந்தப்பட்ட புரட்சி என்றே கருத வேண்டும். இப்பிரச்சினையை ஒழிக்க வேண்டும்.

சமாதானம் நீதி என்பவற்றிற்கு பொலிஸார்தான் சொந்தக்காரர் அல்ல. பொது மக்கள் சமாதானத்தையும் நீதியையும் நிலைபெறச் செய்ய வேண்டும்.

பொது மக்கள் பொலிஸாரை பரம வைரிகள் என்றே கருதுகின்ருர்கள். அந்நிலை மாற வேண்டும்.

சமூகவிரோத செயல்களில் ஈடுபடுவோர் சாதி, இனப் பாகுபாடு இல்லாமல் செய்து வருகின்றனர். அவ்வாறு இருக்கும் போது எம்மிடையே



இலங்கை குடும்பத் திட்டச் சங்கத்தின் யாழ் மாவட்டக் கிளை, அண்மையில் யாழ் மத்திய கல்லூரியில் சனத்தொகை தொடர்பான கருத்தரங்கொன்றை நடத்தியது.

யாழ் மாவட்ட பாடசாலை அதிபர்களுக்காக நடத்தப்பட்ட இக்கருத்தரங்கில் மேற்படி சங்கத்தின் பிரதிநிதி திரு. எஸ். பூவேந்திரன் உரையாற்றுவதைப் படத்தில்காண்க.

இக்கருத்தரங்கில் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்ட யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமி யாம்பிள்ளை, யாழ், அரச அதிபரின் பாரியார் திருமதி ஏ. நேசையா ஆகியோரையும் படத்தில் காணலாம். (ல—240)

## கிளிநொச்சியில் விருந்தினர் விடுதி நிறுவப்படுவதையொட்டி அரச அதிபர் மகிழ்ச்சி

கிளிநொச்சி, ஜூன் 12

"கிளிநொச்சியில் விருந்தினர் விடுதி இல்லாத குறை தீரப்போவதையறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்"

கிளிநொச்சி, பரந்தன் வை. எம். சீ. ஏ. இயக்கம் கிளிநொச்சி கண்டி வீதியில் சுமார் 4 லட்சம் ரூபா செலவில் விருந்தினர் விடுதி ஒன்றை அமைக்க முன் வந்திருக்கிறது. இக்கட்டடத்திற்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. என். ஜெயநாதன் மேற்கண்டவாறு கூறினர்.

பரந்தன் வை. எம். சி. ஏ. தலைவர் திரு. ஏ. கே. இராசேந்திரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வை. எம். சி. ஏ. தேசிய கவுன்சில் தலைவர் ராஜ் விஜயசிங்கா கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக வை. எம். சீ. ஏ. வடபிரதேச பிரதிநிதி எஸ். மனேபவன், யாழ்ப்பாண செயலாளர் எம். தம்பித்துரை, வண பிதா எஸ். செல்வரத்தினம், அபிவிருத்திச் செயலாளர் எஸ். விஜயசிங்கம், தேசிய கவுன்சில் செயலாளர் வோயிட் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரசாங்க அதிபர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"வை. எம். சீ. ஏ. இயக்கம் மக்களின் நல்வாழ்வுக்காகப் பெரும் சேவைகளை ஆற்றிவருகின்றது. ஏழைச் சிறுர்களின் நல்வாழ்வுக்காக பல வழிகளில் உதவிகளை வழங்கி வருகின்றது.

இவ்வியக்கத்தினரிடம் விடுதி வசதி செய்வதற்குப் பணம் இருந்த போதும் காணி இல்லாத குறை இருந்து வந்தது. இதனுல் அரசுடன் தொடர்பு கொண்டு பெறுமதி மிக்க காணியை வழங்கியிருக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினர். (ல—244)

## அபிவிருத்திச் சங்கங்களால் கிராமங்கள் முன்னேறும்

### பொதுக் கூட்டத்தில் உரை

ஒட்டமாவடி, ஜூன் 13

கிராமங்களின் முன்னேற்றத்துக்கு வழி வகுப்பவை கிராம அபிவிருத்திச் சங்கங்களே"

கோறளைப்பற்று வாழைச்சேனை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. கே. தங்கவேலாயுதன் இவ்வாறு கூறினர்.

ஒட்டமாவடி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்புப் பொதுக் கூட்டம் அண்மையில் ஒட்டமாவடி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பொது மக்களும், சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்ட இக்கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையிலேயே திரு. தங்கவேலாயுதன் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கிராமங்களின் அபிவிருத்திக்கு பெரிதும் உதவியாகவுள்ளன.

கிராமங்களில் உள்ள குறைகளை கிராம மக்களே உணர்ந்து அவற்றை நிவர்த்தி செய்ய வழி வகுப்பது கிராம அபிவிருத்திச் சங்கங்கள்தான்.

கிராம மக்களுக்கும், அரசுக்கும் இடையிலான பாலம் போலிருக்கும் இச் சங்கங்களை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பொது மக்கள் இச் சங்கங்களை ஒற்றுமையோடு கட்டியெழுப்பி, கிராமத்தின் முன்னேற்றத்துக்கு அவை சிறந்த முறையில் உதவக் கூடியவாறு உருவாக்க வேண்டும்.

ஒற்றுமையின்றிச் செய்யும் எந்தக் காரியமும் முழுமை பெருது. கிராம அபிவிருத்தியில் ஒற்றுமையின்றிச் செயற்பட்டால் எந்தவித முன்னேற்றமும் ஏற்படாது.

கிராம அபிவிருத்தியில் மக்கள் ஒவ்வொருவரும் ஆர்வத்தோடும், அக்கறையோடும் செயற்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினர். நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவும் இடம்பெற்றது. (ல—186)

## காதலனுடன் அம்பிகா ஓட்டம்



அம்பிகா

கட்டிளங்காளை யுகேந்திரனிடம் மனதைப் பறிகொடுத்தார் அம்பிகா.

யுகேந்திரன் இல்லாமல் வாழ்வே இல்லை என்ற நிலை. ஆனுல், அம்பிகாவின் பெற்றோரோ காதலர்களின் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாமல் முட்டுக்கட்டை போட முனைந்தனர்.

உண்மைக் காதல், எதிர்ப்புக் கணைகளை தூளாக்கி விடாதோ? கண்ணுன காதலனுடன் அம்பிகா, வீட்டை விட்டு வெளியேறி, தனி வீட்டில் வாழ்க்கை வசந்தம் பாடத் துவங்கினர்.

அம்மு கிரியேசன் கருப்புச் சட்டைக்காரன் படத்தில் இந்தக் காட்சியை காணலாம். யுகேந்திரனுக தியாகராஜன் நடிக்கிருர். சில்க் சுமிதா, ஜெயமாலினி, அனுராதா, காந்திமதி, வாணி, மேஜர் சுந்தரராஜன், சங்கிலி முருகன், வினுசக்கரவர்த்தி, எஸ். எஸ். சந்திரன், கவுண்டமணி மற்றும் பலரும் நடிக்கிருர்கள்.

இதன் கதை வசனத்தை கே. எஸ். மாதங்கன் எழுதுகிருர்.

எம். ஆ கர்ணன் ஒளிப்பதிவு. டைரக்ஷன் ஆகிய பொறுப்புகளை கவனிக்க, சங்கர்–கணேஷ் இசை அமைக்கிருர்கள். (ஜு—10)

## ஜெயமாலினியை ரசிக்கச் சென்று கிடைத்த பரிசு

சோளக் கொல்லை, பொம்மைக்கு சேலையை சுற்றிக் கட்டினலும் போதும், பெண் பித்து பிடித்து பல்லை இளிப்பான், அந்த அளவுக்கு பெண்களின் கற்பை சூறையாடுவதில் பேயாக அலைந்தவன், அவன்.

பெண்ணசை காட்டினல் மட்டுமே அவனை ஒழிக்க முடியும் என்று அவனை அழிக்க முனைந்தவர்கள் முடிவு எடுத்தனர். அதற்கு உதவி செய்ய ஜெயமாலினியை தேர்ந்து எடுத்தனர். ஜெயமாலினி என்றதும் அவனுக்கு ஆசை ஏற்பட்டது.

ஜெயமாலினியும் அவனை தந்திரமாக நீர்வீழ்ச்சி ஒன்றுக்கு அழைத்துச் சென்ருர். அங்கு சென்றதும் சேலையை களைந்து எறிந்து, மேலே கீழே என இரு துண்டுக் கச்சைகள் மட்டும் கட்டிக் கொண்டார்! "கவர்ச்சி குலுங்க, குலுங்க ஆடிக் கொண்டே, அந்த பெண் பித்தனை நீர்வீழ்ச்சியின் ஓரமாக அழைத்துச் சென்று "திவர்" என்று அவனை நீர்வீழ்ச்சியில் தள்ள "ஐயோ! நான் செத்தேன்!" என்று அலறினன் அவன். (காப்டன் ராஜ்)

இந்த ரகமான, பயங்கரமான காட்சி தேவர் பிலிம்சின் பிரமாண்ட தயாரிப்பான "நல்ல நாள்" படத்துக்காக ஒகேனகல் நீர்வீழ்ச்சியில் படமானது. (ல—10)

## ஆங்கிலக் கல்வி வளர்ச்சியில் அக்கறைசெலுத்தவேண்டும்

### கோட்டக் கல்வி அதிகாரி உரை

மூதூர், ஜூன் 12

"மாணவர்களின் ஆங்கிலக் கல்வி விருத்தியில் பாடசாலை அதிபர்களும், பெற்ருேரும் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும். மாணவர்களின் எதிர்கால முன்னேற்றத்துக்கு ஆங்கிலக் கல்வி மிக அவசியம்"

மூதூர் கோட்டக் கல்வி அதிகாரி ஜனப் ஏ. வி. முகம்மது இவ்வாறு கூறினர்.

பட்டித்திடல் தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆங்கில தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

மேற்படி வித்தியாலய அதிபர் திரு. எம். தேவன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஜனப் முகம்மது தொடர்ந்து பேசும் போது கூறியதாவது.—

ஒவ்வொருவரும் தம் தாய் மொழியை புரிந்து கொள்வது சுலபமான காரியம். அதனை இலகுவாகக் கற்றுக் கொள்ள முடியும். ஆனுல் உலக மொழியான ஆங்கிலத்தைக் கற்க வேண்டியது மிக அவசியம். அதன் மூலம் எதிர்காலத்தில் மாணவர்கள் அதிக நன்மைகளைப் பெற முடியும்.

கல்வித் திட்டத்தில் ஆங்கிலம் மூன்ரும் வகுப்பிலிருந்து கட்டாயம் போதிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

ஆங்கிலக் கல்வியின் அவசியத்தைக் கருத்திற் கொண்டே அரசு இவ்வாறு செய்திருக்கிறது.

ஆனல் பாடசாலைகளில் போதிய ஆங்கில ஆசிரியர்கள் இன்மையால் உரிய முறையில் போதிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இதனுல் பாடசாலை அதிபர்கள் பெரும் சிரமப்படுகிருர்கள்.

பாடசாலைகளில் போதியளவு ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். அதன் மூலமே ஆங்கிலக் கல்வியில் கிராமப்புற மாணவர்களும் முன்னேற்றமடைவர்.

இவ்வாறு அவர் கூறினர். (ல—186)

**தினபதி**

தொலைபேசி:
23882, 23884, 23864
தந்தி: "தினபதி" கொழும்பு
தபால் பெட்டி இல. 1613
5, குணசேன மாவத்தை,
கொழும்பு — 12.

— 1984 ஜூன் 13 —
சுடர் 17 கதிர் 2700

## கைப்பணி பொருள்கள்

வெளி நாட்டவர்களைக் கவரக் கூடிய விதத்தில் கைப்பணிப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறார் கிராமக் கைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் எஸ். தொண்டமான்.

கைப்பணிகள் இந்த நாட்டு மக்களில் கணிசமான எண்ணிக்கையினருக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்றன.

அவர்கள் வருமானம் பெற வழி செய்கின்றன.

நாட்டுக்கும் அந்நியச் செலாவணி சம்பாதித்துத் தருகின்றன.

இப்படி முக்கியமாக மூன்று வழிகளில் நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் பயன் அளிக்கும் கைப்பணித் துறை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

அமைச்சர் தொண்டமான் கைப்பணித் துறை அபிவிருத்தியில் மிகுந்த அக்கறை கொண்டவர்.

நாட்டின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் அந்தப் பகுதியில் உள்ளவர்களில் ஒரு சிலரையாவது புதிதாகக் கைப்பணியில் ஈடுபட வைத்து விடுவார்.

கைப்பணிகளில் ஈடுபட்டிருப்பவர்கள் பணமுடை காரணமாகத் தொழிலைத் தொடர்ந்து செய்ய முடியாமல் இருந்தால் அவர்களுக்கு ஏதாவது ஒரு வழியில் அரசாங்கத்திடமிருந்து பண உதவி கிடைக்கச் செய்து விடுவார்.

கைப்பணி அபிவிருத்திக்காக அமைச்சர் தொண்ட...

# வாழ்வுக்கு வழிகாட்டும்

# பௌத்த தர்மம்

## இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதை குறிக்கும் பொசன் பௌர்ணமி இன்று

இலங்கையின் பெரும்பான்மை மக்களான சிங்களவரின் கலாசாரத்தின் அடிநாதமாக பௌத்தம் விளங்குகிறது.

இலங்கையின் பௌத்த நெறிக்கான வித்து விதைக்கப்பட்ட நாளின் நினைவு தினமே இன்றாகும்.

ஆம், இன்று பொசன் பௌர்ணமி தினம்.

புத்த பெருமானின் பௌத்த நெறிகள் இலங்கையில் துளிர் விட தொடங்கிய நாள் தான் பொசன் தினம்.

தங்களின் கலாசார நெறிக்கு வீகத்தை ஏற்படுத்த பௌத்த நெறியே சிறந்தது என்பதை அவர் கருத்திற் கொண்டார். அதனால் பௌத்தத்தை உலகம் முழுவதும் பரப்ப முயன்றார்.

பௌத்த கொள்கையில் அளவற்ற நம்பிக்கை கொண்டிருந்த அசோகன், அதனை உலகெங்கும் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டார். தனது மகன் மகிந்தனையும், மற்றும் ஆறு துறவிகளையும் பௌத்த மதத்தை பரப்புவதற்காக இலங்கைக்கு அனுப்பி வைத்தார் அசோகன்.

அனுராதபுரத்திலுள்ள மிகிந்

விடு. அவை உனக்கு என்ன பாவம் செய்தன? அவற்றுக்கு ஏன் இந்தச் சதி?" என்று ஒரு குரல் மலை மீதிருந்து ஒலித்தது.

அதனைக் கேட்டு திகைத்தான் தீசன். தன் அருகிலிருந்த பகுதியில், தனது பெயரை துணிந்து கூறுமளவிற்கு உயர்ந்து விட்டவன் யார் என்பதை

தோன்றினர். தாங்கள் இந்தியாவிலிருந்து கௌதம புத்தரின் பௌத்த மதக் கோட்பாடுகளையும், உண்மைத் தத்துவங்களையும் போதிப்பதற்காக இலங்கை வந்துள்ளதாக தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

மகிந்தனும், தீசனும் முதன் முறையாக சந்தித்துக் கொண்ட அந்த மகத்தான தினம் தான் இன்றைய பொசனாகும்.

அன்றைய அவர்களின் சந்திப்பு, பௌத்த மதம் துளிர் விட்டு, கிளை விட்டு படர்ந்து வளர அத்திவாரமாயிற்று.

மகிந்தனும், மற்றும் துறவிகளும் தீசனுக்கு பௌத்த மதக்

பரிவாரங்களும் பௌத்த மதத்தை தழுவினார்கள். பௌத்தர்களானார்கள்.

அன்று தீசனும், மகிந்தனும் முதன் முறையாக சந்தித்துக் கொண்ட அனுராதபுரத்தையும், மகிந்தலையையும் பௌத்த மக்கள் புனித இடங்களாகக் கருதுகிறார்கள்.

தங்கள் சமயம், கலாசாரம் என்பன பரவக் காரணகர்த்தாக்கள் ஆகிய இருவரும் சந்தித்த இடத்திலேயே பௌத்த மக்கள் ஒன்று கூடி பொசன் விழாவைக் கொண்டாடுகிறார்கள்.

பௌத்தத்தை உலகுக்கு அறிமுகப்படுத்த அயராது பாடுபட்ட அசோகன் தனது முயற்சியில் வெற்றி கண்டார்.

இன்றைய நாளிலே புத்த பிரானின் வழியை பின்பற்றி அஹிம்சை, சத்தியம், கருணை, தர்மம், நல்லொழுக்கம், அடக்கம் ஆகியவற்றை கடைபிடித்து,

**— ரேணுகா தியாகராஜா —**

புத்துயிர் கொடுத்து, புதுவடிவம் அளித்த இன்றைய தினத்தை சிங்கள மக்கள் கோலாகலமாகக் கொண்டாடுகிறார்கள்.

இலங்கையில் சுமார் இரண்டாயிரத்து இருநூற்றி தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு பொசன் தினத்தில் பௌத்த நெறிக்கான வித்திடப்பட்டது.

வாழ்க்கைச் சூழலில் பந்த பாசத்திலே சிக்குண்டு இவ் உலகில் மக்கள் தத்தளித்துக் கொண்டிருந்தனர்.

இதைக் கண்ணுற்ற புத்த பிரான் தனது சுக போகங்களைத் துறந்தார். அதன் பின் செயலிழந்து நிற்கவில்லை. சத்தியத்தை தேடும் முயற்சியில் தீவிரமாக செயல்பட்டார்.

அதற்காக அவர் எங்கும் செல்லவில்லை. எவர் உதவியையும் நாடவில்லை. தனக்குள்ளிருந்த ஞானத்தைக் கொண்டே சத்தியம் என்ன என்பதைப் புரிந்து கொண்டார்.

அதன்படி மக்கள் வாழ வேண்டிய உரிய முறைகளைப் போதித்தார். கடைப்பிடித்து நடக்க

தலை எனும் இடத்தில் ஒரு நாள் தனது பரிவாரங்களுடன் வேட்டையாடிக் கொண்டிருந்தான் தீசன்.

சுதந்திரமாகத் துள்ளித் திரிந்த மான் குட்டிகள் எல்லாம் வேட்டைப் பரிவாரங்களைக் கண்டு துள்ளி ஓடின. அவற்றைத் துரத்திச் சென்றான் தீசன்.

அப்போது திடீரென்று, "தீசனே", உனது தீராத வேட்கையை நிறுத்தி விடு. ஒன்றுமறியாது துள்ளித் திரியும் இந்த மான் குட்டிகளை விட்டு



அறிவதற்காக சுற்றும், முற்றும் நோக்கினான்.

அதன் பின்னர் மகிந்தனும், துறவிகளும் அவன் முன்

கொள்கைகளையும், அதன் நுணுக்கங்களையும் போதித்தனர்.

அதன் பின் தீசனும் அவனது

நாம் அனைவரும் ஒன்றுபட்டு உயர்ந்த வாழ்வு வாழ திடசங்கற்பம் கொள்வோமாக.

(ல—ர)

# புதுமைகள் பல புரியும்

# புனித அந்தோனியார்

## செய்தித் திரட்டு

### கிணற்றில் விழுந்து குழந்தை மரணம்

அக்கரைப்பற்று, ஜூன் 12

தாயின் கையிலிருந்து பச்சிளங் குழந்தை ஒன்று தவறி கிணற்றில் விழுந்து இறந்தது.

இப்பரிதாப சம்பவம் அக்கரைப்பற்று 3ஆம் குறிச்சியில் நடந்தது.

தாய் ஒரு கையில் குழந்தையை வைத்துக் கொண்டு மறு கையால் தண்ணீர் அள்ளும் போதே குழந்தை தவறி விழுந்ததாம்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. த. சம்புநாதபிள்ளை விபத்து மரணம் என்று தீர்ப்பளித்தார். (ல)

### விழாக்கள்

பேசாலை, ஜூன் 12

மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை சமூக உதாவ விழாக்கள் கொண்டாடப்படும்.

இவை கிராமோதய சபைகள் மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் கொண்டாடப்படும்.

இவ் விழாக்களின் போது சர்வ மத வழிபாடு, விளையாட்டுப் போட்டிகள், சிரமதானங்கள் பூர்த்தி செய்யப்பட்ட சமூக உதாவ திட்டங்களைத் திறந்து வைத்தல், புதிய திட்டங்களை ஆரம்பித்து வைத்தல் என்பன இடம்பெறும். (ல—251)

### நடவடிக்கை

புங்குடுதீவு, ஜூன் 12

ஊர்காவற்றுறைக்கும், அனலைதீவுக்கும் இடையே நடைபெறும் அரச மோட்டார்ப் படகுச் சேவையைத் தினமும் இரு தடவை நடத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது தினமும் ஒரு முறை மட்டுமே இப்படகுச் சேவை நடைபெற்று வருகிறது.

ஊர்காவற்றுறையில் இருந்து அனலைதீவு, எழுவைதீவு செல்லும் பிரயாணிகளுக்கு இச் சேவை பெரிதும் பயன்படு

மல் இருந்தால் அவர்களுக்கு ஏதாவது ஒரு வழியில் அரசாங்கத்திடமிருந்து பண உதவி கிடைக்கச் செய்து விடுவார்.

கைப்பணி அபிவிருத்திக்கான அமைச்சர் தொண்டமானின் கண்காணிப்பில் முக்கியமாக மூன்று நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

1. தேசிய வடிவமைப்பு நிலையம்.
2. கைப்பணிப் பொருள்கள் சபை.
3. தேசியக் கைப்பணிக் கவுன்ஸில்.

கைப்பணிப் பொருள்களுக்கான வடிவங்களை அமைப்பது, கைப்பணியாளர்களுக்கு உதவியும் ஊக்கமும் உற்சாகமும் பயிற்சியும் அளிப்பது, கைப்பணிப் பொருள்களைக் கைப்பணியாளர்கள் விற்றுப் பணம் பெற உதவுவது, கைப்பணிப் பொருள்களை வெளிநாடுகளிலும் விற்பனைக்கு விட வழி செய்வது போன்ற முயற்சிகளில் மேற்படி மூன்று நிறுவனங்களும் ஈடுபட்டு வருகின்றன.

கைப்பணிப் பொருள்களை உற்பத்தி செய்வது இலங்கை மக்களுக்குப் புதிய விஷயம் அல்ல. பரம்பரை பரம்பரையாகவே இலங்கை மக்கள் கைப்பணிப் பொருள்களை உற்பத்தி செய்து வருகிறார்கள்.

இந்த நாட்டின் கலை, கலாசாரத்தைப் பிரதிபலிக்கக் கூடிய விதத்தில் அலங்காரப் பொருள்களையும் அன்பளிப்புப் பொருள்களையும் மற்றும் பாவனைப் பொருள்களையும் நம்மவர்கள் உற்பத்தி செய்து வருகிறார்கள்.

கைப்பணிப் பொருள்களை காலத்துக்கு ஏற்ப நவீனமாக வடிவமைத்து புதிய மோஸ்தரில் கண்ணைக் கவரும் விதத்தில் உற்பத்தி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவற்றிற்கு உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் நல்ல "மார்க்கட்" இருக்கும்.

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு ஒவ்வொரு வருடமும் பல்லாயிரக்கணக்கில் உல்லாசப் பிரயாணிகள் வருகிறார்கள். ஒவ்வொரு உல்லாசப் பிரயாணியும் ஒரு டாலரையாவது கைப்பணிப் பொருள் வாங்குவதற்குச் செலவு செய்தாலே எமக்குப் பெருந் தொகை அந்நியச் செலாவணி கிடைக்கும் என்றார் அமைச்சர் தொண்டமான்.

தரமான கைப்பணிப் பொருள்களானால் அவற்றை இங்கே வருகிறவர்களுக்கும் விற்கலாம். வராமல் வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கும் அங்கே வைத்து விற்கலாம்.

கைப்பணிப் பொருள்களின் தரத்தை உயர்த்த, சம்பந்தப்பட்ட அனைவரும் முயற்சி செய்ய வேண்டும்.

---

செல்லவில்லை. எவர் உதவியையும் நாடவில்லை. தனக்குள்ளிருந்த ஞானத்தைக் கொண்டே சத்தியம் என்ன என்பதைப் புரிந்து கொண்டார்.

அதன்படி மக்கள் வாழ வேண்டிய உயரிய முறைகளைப் போதித்தார். கடைப்பிடித்து நடக்க வேண்டிய ஒழுக்க நெறியினை அறிவுறுத்தினார்.

அஹிம்சா வழியில் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறினார்.

இந்த கால கட்டத்தில் தேவநம்பிய தீசன் அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆட்சி புரிந்து கொண்டிருந்தான். அதேவேளையில் இந்தியா அசோகச் சக்கரவர்த்தியின் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

அசோகச் சக்கரவர்த்தி பல போர்களைக் கண்டவர். போரினால் ஏற்பட்ட சேதங்கள், பலிகள் என்பன அசோகனை துயருக்குள்ளாக்கியது. அவரின் துயர் துடைக்கும் நிவாரணியாக புத்த பிரானின் பௌத்த நெறியும், அதன் உண்மைத் தத்துவங்களும் அமைந்தன.

பௌத்த தத்துவங்கள், புத்தரின் போதனைகள், உண்மை நெறிகள் என்பன அசோகனை ஈர்த்தெடுத்தன.

உலகம் முழுவதிலும் சாந்

---

# புதுமைகள் பல புரியும்

# புனித அந்தோனியார்

## கொச்சிக்கடையில் இன்று கோலாகலத் திருவிழா

புனித அந்தோனியாரின் திருவிழா, இன்று கொழும்பு கொச்சிக்கடையில் கொண்டாடப் படுகிறது. அதை யொட்டியே இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

கத்தோலிக்கத் திருச்சபை பிரகடனப் படுத்திய புனிதர்களில் புதுமைகள் பல புரிந்தவர் புனித அந்தோனியார் என்பது பிரசித்தம்.

இன்றும் நேற்றல்ல, கடந்த பல ஆண்டு காலமாக கொச்சிக்கடையில் கோடானு கோடி பக்தர்களுக்கு அருள் பாலித்து வரும் புனிதரின் அற்புதச் செயல்கள் இதற்கு சான்று பகர்கின்றன.

இன்றைய திருவிழா வழக்கத்தைவிட கோலாகலமாகக் கொண்டாடப் படுவதற்கு ஒரு காரணம் உண்டு.

மேற்படி ஆலயம் அபிஷேகம் செய்யப்பட்ட 150 ஆவது வருடமும் சேர்ந்தே இன்றைய விழாவுக்கு தனி மெருகூட்டுகிறது.

இன, மத, மொழி பேதமின்றி தன்னை நாடி வரும் சகல மக்களுக்கும் அருள்பாலித்து வரும் புனித அந்தோனியார் தன்னை நம்பிய எவரையும் கைவிட்டதில்லை.

மக்களுக்குப் பாதுகாவலராக இருந்து, எத்தனையோ பேராபத்துக்களிலிருந்து அவர்களை காப்பாற்றியும் நற்பணி ஆற்றுகிறார் அவர்.

18 ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தரின் கொடூர ஆட்சிப் பிடியில் இலங்கை சிக்கியிருந்த நாளில் சாதாரண ஒரு செபக் குடிலாக உருவானதுதான் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம்.

1822 ஆம் ஆண்டு இந்தச் சிறிய செபக் குடிலுக்கு கோவாவிலிருந்து புனித அந்தோனியாரின் திருச் சொரூபம் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் செபக் குடில், தேவாலயமாகத் தரமுயர்ந்தது. புனிதரை நாடி வந்த பக்தர்களின் எண்ணிக்கையும் நாளாந்தம் அதிகரிக்க ஆரம்பித்தது.

இதனைத் தொடர்ந்து 1834 ஆம் ஆண்டு தேவாலயம் அபிஷேகம் செய்யப்பட்டது.

ஆண்டுகள் பல கழிந்தன. இன்று தலைநகரில் தனிச் சிறப்பு பெற்று சௌந்தர்யமாகக் காட்சி தருகிறது இந்த ஆலயம்.

அபிஷேகம் பண்ணிய ஆண்டிலிருந்து திருவிழா தொடர்ந்து நடைபெறுகிறது. ஒருசிலருடன் சிறியதொரு விழாவாக தலையெடுத்த புனிதரின் திருவிழா இன்று கோலாகலப் பெரு விழாவாகக் கொண்டாடப் படுகிறது.

யேசு பாலன் மீது புனிதர் கொண்டிருந்த அளவுகடந்த பற்று, பாலனையே திருக்கரத்தில் ஏந்தும் பாக்கியத்தை அவருக்குக் கொடுத்தது.



— சந்திரா —

தன்னை அண்டியோருக்கு அபயக்கரம் அளித்து அருள்பாலிக்கும் புனிதரின் கருணைக்கு எல்லை தான் ஏது?

புனிதரின் பாதக்கமலங்களுக்கு நாமும் எமது அஞ்சலியை செலுத்துவோம், நலம் பெறுவோம். (ல—ஐ)

---

## புனித ரமழான் சிந்தனைகள்

புனித ரமழானின் புண்ணியம் மிக்க இந்த நாட்களில் நாம் சமுதாய ஒற்றுமையின் அவசியம் குறித்தும் கருத்திற் கொள்வது நன்று.

ஒற்றுமையின் மேன்மையை நாம் நன்கு உணர வேண்டும். ஒற்றுமையே என்றும் ஏற்றம் தரும் என்பதைப் புரிய வேண்டும்.

ஒரு சமுதாயத்தின் மேன்மையும் உயர்ச்சியும் அச்சமூக மக்களின் ஐக்கியப் பிணைப்பில் தான் வெகுவாகத் தங்கியுள்ளது. முஸ்லிம்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து அனைவருக்கும் முன்மாதிரி காட்ட வேண்டும்.

"விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயப்பட வேண்டியவாறு மெய்யாகவே பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிபட்ட முஸ்லிம்களாக அன்றி நீங்கள் மரணிக்க வேண்டாம்).

மேலும் நீங்கள் யாவரும் (ஒன்று சேர்ந்து) அல்லாஹ்வுடைய (வேதமாகிய) கயிற்றை (இஸ்லாத்தை)ப் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். (உங்களுக்குள் தர்க்கித்துக் கொண்டு) நீங்கள் பிரிந்து விட வேண்டாம் அல்குர்ஆன் 3,102, 103.

இவ்வாறு இறைமறை நாம் ஒற்றுமையுடன் வாழ வேண்டுமென்று எமக்கு அறிவுறை பகர்ந்து கொண்டிருக்கிறது.

ஆனால் இன்றைய நம் சமூகத்தைப் பார்க்கும் போது ஒற்றுமை குன்றி வேற்றுமைகள் மலியும் நிலையையே பரவலாகக் காண்கிறோம்.

"ஒற்றுமைப் படுங்கள்; ஐக்கியப் படுங்கள்" என்ற கூக்குரல் எல்லாம் வாய்ப் பேச்சளவில் மட்டுமே இருக்கிறது. செயல் அளவில் ஒற்றுமையைக் காண முடிவதில்லை.

இஸ்லாம் சாந்தி மதம், சமாதானத்தையும் வலியுறுத்தும் நேரிய மார்க்கம், வாழும் ஓர் உன்னத வழி.

அந்த நேரிய இஸ்லாத்தின் வழி வந்த முஸ்லிம்களாகிய நாம் குடும்ப ரீதியாக, இயக்க ரீதியாக, கிராம ரீதியாக, மாகாண-மாவட்ட ரீதியாக எல்லாம் ஒற்றுமைப்பட வேண்டும்.

"இந்நாட்டில் குறிப்பாக சிறுபான்மைச் சமூகமாக வாழும் முஸ்லிம்கள் அனைவரும் ஐக்கியப் பட்டு கருமங்களை ஆற்ற முயலாதவரை எமக்கு விமோசனம் கிடைக்கப் போவதில்லை.

ஒன்றுபட்டால் வாழ்வு உண்டு. இன்றேல் தாழ்வைத் தான் நாம் ஏற்க வேண்டும். நம்மில் இருக்கும் பகைமைகளும் ஒழிய வேண்டும்.

எமது மூதாதைய முஸ்லிம்கள் [illegible]

ஒருகணம் நினைவில் மீட்டிப் பார்க்கும் போது ஒற்றுமையால் அவர்கள் சாதித்தவை அநேகம் என்பது தெள்ளத் தெளிவாகும்.

ஒரே உடலின் உறுப்புக்களைப் போல் ஈமான் உடையவர்கள் பரஸ்பர அன்பு, கருணை, பாசம் கொண்டவர்களாய் இருப்பதை நீங்கள் காண்பீர்கள்.

உடலின் ஓர் அங்கம் நோயால் பாதிக்கப்பட்டால் உடல் முழுவதும் அதன் வேதனையால் துடி துடித்து விடுகிறது. பின்னர் உடம்பெல்லாம் சுறுசுறுப்பைப் பெற்று அந்த அங்கத்துக்கு உதவி செய்ய ஓடி வருகிறது.

இவ்வாறு நபிமணி (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

ஆகவே உத்தம நபிகளாரின் உம்மத்துமார்களான நாம் எல்லாக் கட்டங்களிலும் ஒற்றுமையுடனும், அன்பன்னத்துடனும் நடந்து முன்மாதிரி காட்டுவோம்.

சிறு சிறு பிணக்குகளை மறந்து பாசப் பிணைப்பால் ஒன்றுபடுவோம்! அல்லாஹுத்தஆலா அருளட்டும். ஆமீன்! யாரப்பல் ஆலமீன்! !

ரமழானின் மகத்துவத்தைக் கொண்டு அல்லாஹ் எமக்கு நல் வழி காட்டுவானாக!

— எம். எஸ். [illegible]

---

அடைப்படுகின்றன.

தற்போது தினமும் ஒரு முறை மட்டுமே இப்படகுச் சேவை நடைபெற்று வருகிறது.

ஊர்காவற்றுறையில் இருந்து அனலைதீவு, எழுவைதீவு செல்லும் பிரயாணிகளுக்கு இச் சேவை பெரிதும் பயன்படுகிறது.

இச் சேவையை மேலும் விஸ்தரிக்குமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியிருந்தனர்.

இதன் பயனாகவே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது. (ல—240)

## உற்சவம்

கொழும்பு, ஜூன் 13

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய கொடியேற்ற உற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகும்.

ஜூலை 11 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 12 ஆம் திகதி தீர்த்தோற்சவமும், 13 ஆம் திகதி பூங்காவனமும் இடம்பெறும். (ல)

## கட்டடம்

புங்குடுதீவு, ஜூன் 12

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய நூலகத்திற்கென நூலகக் கட்டடமொன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவரான திரு. நா. சுப்பிரமணியம் தமது சொந்தச் செலவில் இக்கட்டடத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறார்.

இம்மாத இறுதியில் இப் புதிய கட்டடம் திறந்து வைக்கப்படுமெனப் பிரஸ்தாப வித்தியாலய அதிபர் திரு. த. துரைசிங்கம் தெரிவித்தார். (ல—240)

## தற்கொலை

சூதாட்டத்தில் பணத்தைத் தோற்றதால் மனமுடைந்த இளைஞர் ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

பலாங்கொடை வலேகொடையைச் சேர்ந்த பீ. சுகததாச (32 வயது) என்பவரே இவ்வாறு மரணமானார்.

மொரவெல சடுதி மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார். (ல)

## தர்ம போதனை

கொழும்பு, ஜூன் 13

கொழும்பு ஸ்ரீ சுசரித்த மண்டபத்தில் இன்று மாலை 7 மணி முதல் 8 மணி வரை சிங்களம், தமிழ் மொழிகளில் தர்ம போதனை நடத்தப்படும்.

நெதலகமுவே தர்மராஜ கலாபீட ஆசிரியரும், சாஸ்திர வல்லுநருமான வண. தோரா ஞானரத்தின தேரோ இதனை நடத்துவார். (ல)



நியூகினியில் நிலத்திற்கு அடியிலான நதிகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள இருக்கும் பிரிட்டிஷ் ஆய்வுக் குழுவினரையே படத்தில் காண்கிறீர்கள். ஆபத்து நிறைந்த இந்த ஆய்வை இவர்கள் எதிர்வரும் அக்டோபர் மாதம் ஆரம்பிப்பார்கள். (ண)

# எல்லைப்புற படை குறைப்புக்கு

# இந்தியா — வங்காளதேசம் இணக்கம்

டாக்கா, ஜூன் 12

வங்காளதேச — இந்திய எல்லைப்புறங்களிலுள்ள படைகளைக் குறைப்பதற்கு இந்தியாவும் வங்காள தேசமும் இணக்கம் தெரிவித்திருக்கின்றன.

எல்லைப் புறங்களில் மேலதிமாக நிலை கொண்டிருக்கும் துருப்புகளை இரண்டு நாடுகளும் இம்மாத பிற்பகுதியளவில் திருப்பி அழைத்துக் கொள்ளும்.

வங்காளதேச உள்துறை அமைச்சு வட்டாரங்கள் இத்தகவலை நேற்றுத் திங்கட்கிழமை தெரிவித்தன.

இந்திய எல்லைக் காவல் படையின் பிரதி இன்ஸ்பெக்டர் ஜெனரல் பிரிகேடியர் பரமேஸ்வர் பிள்ளையும், வங்காளதேச எல்லைக்காவல் ரைபிள் படைப் பிரிவின் வடபகுதிக் கமாண்டர் லெப்டினன்ட் கேணல் சிறஜுல் இஸ்லமுத்தும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பேச்சுவார்த்தை நடத்தினர்கள்.

இந்தப் பேச்சுவார்த்தை வடக்கு வங்காளதேச ராஜ்பூர் மாவட்டத்தில் உள்ள எல்லைக் காவல் நிலையம் ஒன்றில் நடைபெற்றது.

இப்பேச்சுவார்த்தையையடுத்தே எல்லையில் படை குறைப்பதற்கான இணக்கம் ஏற்பட்டது.

பேச்சுவார்த்தை சுமார் 4மணி நேரம் நீடித்தது. சினேகபூர்வ சுமுகமான நிலைமையிலேயே பேச்சுவார்த்தை நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

எல்லையில் படை குறைக்கப்படுவது இருநாடுகளுக்கும்இடையிலான பதற்ற நிலைமையை தணிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியா வங்காளதேச எல்லையை அண்டியிருக்கும் பகுதிகளில் முட்கம்பி வேலிகள் அமைக்கத் தொடங்கியதையடுத்து கடந்த ஏப்ரல் மாதம் இரண்டு நாட்டுத் துருப்புகளுக்கும் இடையில் கைகலப்புகள் நிகழ்ந்தன. இதனல் வங்காள தேச இராணுவ வீரர் ஒருவர் மாண்டார் என்பது ஞாபகம் இருக்கலாம். (ண)

## சீக்கியர் போட்டி அரசு

நியூயோர்க், ஜூன் 12

அமெரிக்காவில் சீக்கிய பிரிவொன்று இரண்டாவது போட்டி அரசு ஒன்றை உருவாக்கப் போவதாக அறிவித்திருக்கிறது.

இவர்கள் தல் கல்ஸா கட்சியின் அங்கத்தினர்களாவர். (ண—ந)

### சிக்கிய திவிரவாதிகளுக்கு எதிரான

# தேடுதல் வேட்டையில்

# 90 இந்திய வீரர்கள் பலி

புதுடில்லி, ஜூன் 12

மொத்தம் 90 இந்திய இராணுவ வீரர்கள் மாண்டார்கள். சீக்கிய தீவிரவாதிகளைத் தேடி வேட்டையாடும் நடவடிக்கைகளின் போதே இவர்கள் கொல்லப்பட்டார்கள். அமிர்தசரஸில் உள்ள பொற்கோயிலை கடந்த புதன்கிழமை இராணுவத்தினர் முற்றுகையிட்டார்கள் அல்லவா? அதற்குப் பின்னரே அவர்கள் தேடுதல் வேட்டையை ஆரம்பித்தார்கள்.

இந்தத் தகவலை இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

ஆயினும் அவர் சீக்கியத் தீவிரவாதிகள் தரப்பில் ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள் பற்றிய விவ...

இராணுவத்தினர் நடத்திய முற்றுகையின் போது சுமார் 1000 சீக்கிய தீவிரவாதிகளும் இரா...

## சிங்கப்பூர் பாடசாலைகளில்

## திருமணமும் ஒரு பாடம்

### அடுத்த மாதம் பரீட்சார்த்தம்

சிங்கப்பூர், ஜூன் 12

சிங்கப்பூர் பாடசாலைகளில் திருமணமும் ஒரு பாடமாகப் போதிக்கப்படும் இத்திட்டம் பரீட்சார்த்தமாக அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும்.

கல்வி அமைச்சு அதிகாரிகள் இன்று இதனைத் தெரிவித்தார்கள்.

வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுப்பது, திருமண வாழ்வின் பொறுப்புகள் பற்றி இப்பாடத்தில்போதிக்கப்படும்.

காதல், குழந்தைகள், பாலியல், விவாகரத்து ஆகியன இந்தப் பாடத் திட்டத்தில் உள்ளடக்கப்படும்.

17 வயது முதல் 19 வயது வரையிலான பாடசாலை மாணவர்களுக்கு இப்பாடங்கள் போதிக்கப்படும்.

படித்த சிங்கப்பூர் பிரஜைகள் நாட்டில் அறிவாளிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக கூடுதல் பிள்ளைகளைப் பெற வேண்டும் என்று சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யீ அழைப்பு விடுத்திருக்கிறார். இதனை அடுத்தே இந்தத் திட்டம். (ண)

## மாண்ட வீரரின் குடும்பங்களுக்கு தலா லட்ச ரூபா வெகுமதி

புதுடில்லி, ஜூன் 12

பஞ்சாப்பிலும் சண்டிகார் யூனியன் பிரதேசத்திலும் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது மாண்ட இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கும், அதிகாரிகளின் குடும்பங்களுக்கும் தலா ஒரு லட்ச ரூபாவும் ஓய்வூதிய...

### கடந்த இரு மாத காலமாக

# துருக்கியில் 266 கைதிகள் உண்ணாவிரத போராட்டம்

## மரணத்தின் விளிம்பில் 16 கைதிகள்

அங்காரா, ஜூன் 12

துருக்கியிலுள்ள இரண்டு இராணுவ சிறைச்சாலைகளில் 266 கைதிகள் கடந்த இரண்டு மாதகாலமாக...

26 பேர் பெண்களாவர்.

உண்ணாவிரதம் இருக்கும் பெரும்பாலான கைதிகள் இரகசிய இயக்கங்களான "புரட்சிகர இடதுசாரி இயக்கம்", "புரட்சிக் கம்யூனிஸ்ட்டுகளின் துருக்கிய லீக்" ஆகியனவற்றைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்...

றுகையிட்டார்கள் அல்லவா? அதற்குப் பின்னரே அவர்கள் தேடுதல் வேட்டையை ஆரம்பித்தார்கள்.

இந்தத் தகவலை இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

சீக்கியப் பயங்கரவாதிகளுடனுன மோதல்களில் சுமார் 270 இராணுவ வீரர்கள் படுகாயமடைந்தார்கள் என்றும் அவர் சொன்னுர்.

பஞ்சாப்பில் உள்ள இராணுவப் பிரிவின் தலைவரான ஜெனரல் ஆர். கே. காவுர் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

ஆயினும் அவர் சீக்கியத் தீவிரவாதிகள் தரப்பில் ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள் பற்றிய விவரத்தை வெளியிடவில்லை.

கடந்த ஐந்து நாட்களாக அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் பஞ்சாப்பின் ஐந்து மாவட்டங்களில் தளர்த்தப்பட்டிருக்கிறது என்றும் அவர் அறிவித்தார்.

புனிதநகர் அமிர்தசரஸில் உள்ள சீக்கியப் பொற் கோவில் இராணுவத்தினர் நடத்திய முற்றுகையின் போது சுமார் 1000 சீக்கிய தீவிரவாதிகளும் இராணுவ வீரர்களும் மாண்டார்கள் என்று வெளிவந்த செய்திகள் குறித்து அவர் எதுவித கருத்தும் வெளியிடவில்லை.

பஞ்சாப் விவகாரத்தில் 450 பேர் மாண்டார்கள் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆயினும் மாண்டவர் தொகை 1000 ஆகும் என்று நாடாளுமன்ற உறுப்பினரான குஷ்வந்த் சிங் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்திருந்தார்.

இதேவேளையில் இந்தியாவின் மேற்கு, கிழக்கு, தெற்குப் பகுதிகளில் உள்ள துருப்புகளில் நூற்றுக்கணக்கான சீக்கியவீரர்களினுல் நடத்தப்பட்ட கிளர்ச்சிகள் அடக்கப்பட்டு விட்டன. என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ண)

...லும் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது மாண்ட இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கும், அதிகாரிகளின் குடும்பங்களுக்கும் தலா ஒரு லட்ச ரூபாவும் ஓய்வூதிய விருதுகளும் வழங்கப்படும்.

இந்திய பாதுகாப்பு அமைச்சு இதனை அறிவித்தது.

இராணுவ நடவடிக்கைகளின் போது காயமுற்ற வீரர்களுக்கு தலா 75.000 ரூபா வழங்கப்படும்.

மரணமான வீரர்களின் மனைவிமார்கள் அந்த வீரர்களின் கடைசி மாத சம்பளத் தொகை அந்த வீரர்கள் இளைப்பாறும் காலம் வரை பெறுவதற்கும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. அல்லது தொடர்ந்து ஏழு வருட காலம் மாதாந்தம் அந்தப் பணம் அவர்களுக்கு வழங்கப்படும்.

இறந்த வீரர்களின் சேவைக் காலம் பூர்த்தியாகிய பின்னர் அவர்களின் மனைவிமாருக்கு சாதாரண ஓய்வூதியம் வழங்கப்படும். (ண)

# உலகச் செய்திகள்

## மரணத்தின் விளிம்பில் 16 கைதிகள்

அங்காரா, ஜூன் 12

துருக்கியிலுள்ள இரண்டு இராணுவ சிறைச்சாலைகளில் 266 கைதிகள் கடந்த இரண்டு மாதகாலமாக உண்ணுவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றுர்கள்.

இவர்களில் இடதுசாரி இயக்கத்தைச் சேர்ந்த 16 அரசியல் கைதிகளின் நிலைமை மோசமாகி இருக்கிறது.

கைதிகளோடு நெருங்கிய தொடர்புடைய வட்டாரங்கள் இத்தகவல்களை தெரிவித்தன.

சிறைச்சாலையில் நிலவும் மோசமான நிலைமைகளுக்கு எதிராகவும், தம்மீது நியாயபூர்வமான நீதி விசாரணையை நடத்தக் கோரியுமே இவர்கள் உண்ணுவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

கடந்த ஏப்ரல் 11ஆம் திகதி இந்த உண்ணுவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த கைதிகளில் 26 பேர் பெண்களாவர்.

உண்ணுவிரதம் இருக்கும் பெரும்பாலான கைதிகள் இரகசிய இயக்கங்களான "புரட்சிகர இடதுசாரி இயக்கம்", "புரட்சிக் கம்யூனிஸ்ட்டுகளின் துருக்கிய லீக்" ஆகியனவற்றைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுகின்றனர்.

கைதிகளில் 44 பேர் சாகும் வரையிலான உண்ணுவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருக்கிறுர்கள். இவர்களின் குடும்பத்தவர்களும் கடந்த மே 19ஆம் திகதி முதல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

துருக்கியில் சுமார் 20,000 அரசியல் கைதிகள் சிறைவைக்கப்பட்டிருக்கிறுர்கள் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. (ண)

## உண்ணுவிரதம்

வார்ஸோ, ஜூன் 12

போலந்து அதிருப்தியாளரான ஜாசெக் குரொன் நேற்று சிறையில் உண்ணுவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தார்.

அவருடைய மகன் மசியெச் இத்தகவலைத் தெரிவித்தார். (ண)

## சுற்றுப்பயணம்

டுனிஷ், ஜூன் 12

அரபு லீக்கின் பொதுச் செயலாளர் செட்லி கிளிபி நேற்று தென் கொரியா, இந்தோனேஷியா, தாய்லாந்து, வங்காளதேசம் ஆகிய நாடுகளுக்குப் பயணமானுர். (ண)

## பத்திரிகைத் தடை

டாக்கா, ஜூன் 12

எதிர்க்கட்சி வங்க மொழித் தினசரியான "டைனிங் தேஷ்" பத்திரிகைக்கு வங்காளதேச இராணுவ அரசு நேற்று தடைவிதித்தது. (ண)

## இந்திராவின் உருவப்படம் கனடாவில் எரிப்பு

ஒட்டாவா, ஜூன் 12

சீக்கிய ஆர்ப்பாட்டக்காரர்கள் கனேடிய நகரமான ஒட்டாவாவில் வைத்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் உருவப் படங்களைத் தீவைத்து எரித்தார்கள்.

நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 25,000 சீக்கியர்கள் கலந்து கொண்டார்கள்.

புனித நகர் அமிர்தசரஸில் உள்ள சீக்கிய பொற் கோயிலை துருப்புகள் முற்றுகையிட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பஞ்சாப்பில் தனியான சீக்கிய ராஜ்யம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தார்கள்.

பொற் கோயிலில் இராணுவம் முற்றுகையிட்டது குறித்து பழிவாங்கப்படும் என்றும் அவர்கள் சூளுரைத்தார்கள்.

### சிங்கப்பூரில்

இதேவேளையில் சிங்கப்பூரிலும் சுமார் 20,000 சீக்கியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினுர்கள். (ண)

## பொற்கோயிலினுள் நுழைய முயன்ற 26 சீக்கிய தீவிரவாதிகள் மரணம்

புதுடில்லி, ஜூன் 12

புனித நகரான அமிர்தசரஸுக்குள் இராணுவத்தில் உள்ள அதிருப்தி சீக்கிய கிளர்ச்சியாளர்களும், சீக்கியர்களும் அத்துமீறிப் பிரவேசிக்க முயன்றுர்கள். இதனைத் தடுக்க இந்திய பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை எடுத்த போது 26தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். 355 பேர் கைது செய்யப்பட்டனர்.

வடமாநிலமான உத்தர பிரதேசத்தில் ஜுவான்பூர் நகரின் அருகே பல மணித்தியாலங்கள் இரு பிரிவினருக்கிடையிலும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது. நகரில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் இச் செய்தியை ஊர்ஜிதப்படுத்த முடியாதென பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

தென் மேற்கு மாநிலமான மஹாராஸ்டிராவில் இராணுவத்தில் உள்ள சீக்கிய வீரர்களை புரட்சியில் சேர்ந்து அமிர்தசரஸுக்குச் செல்லுமாறு சீக்கிய குடிமக்கள் தூண்டி விட்டனர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

மஹாராஸ்டிராவிலும், குஜராத்திலும் கிளர்ச்சியில் ஈடுபட்ட 60 வீரர்கள் கைது செய்யப்பட்டனர். 9 இராணுவ வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 2 வீரர்களும் குடிமக்களில் ஒருவரும் கொல்லப்பட்டனர். 10 வீரர்களும் குடிமக்களில் ஒருவரும் காயமுற்றனர்.

கிழக்கு நகரான கல்கத்தாவிலும் சில அருப்தி இராணுவ சீக்கிய வீரர்கள் வெளியேறியிருந்தனர். ஆனுல் இவர்கள் முகாமுக்குத் திருப்பியழைக்கப்பட்டனர் என்று கூறப்படுகிறது.



இந்த இளம் தாய் தனது சிறிய குழந்தையை சீராட்டும் அதேவேளையில் தனது மூத்த குழந்தையையும் புறக்கணித்து விடவில்லை. அதனை முதுகில் காவிச் செல்கிறுர். மொஸாம்பிக்கைச் சேர்ந்தவர் இவர். ஆபிரிக்க நாடுகள் பலவற்றிலும் இது ஒரு பொதுவான நடைமுறையாக இருந்து வருகிறது. ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள சனத் தொகையில் பாதிப்பேர் பெண்களாவர். (ண)

### பேரூட்டிலும் சுற்றுப்புறங்களிலும்

## முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மோதல் ஒரே நாளில் 43 பேர் மரணம்

பேருட், ஜூன் 12

பேருட்டிலும், அதன் சுற்றுப் புறப் பகுதிகளிலும் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கும், கிறிஸ்தவ தீவிரவாதிகளுக்கும் இடையே நேற்று திங்கட்கிழமை பயங்கர மோதல்கள் தலைதூக்கின.

இந்த மோதல்களினுல் ஒரே நாளில் குறைந்தபட்சம் 43 பேர் மாண்டார்கள். 128 பேர் படுகாயமுற்றுர்கள். [illegible] திலும் நடைபெற்ற சம்பவங்களில் இது மோசமானது என்று கருதப்படுகின்றது.

ஆஸ்பத்திரி வட்டாரங்களும், வானெலி செய்திகளும் இத்தகவலை இன்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தன.

இரு தரப்பு சமூகத்தவர்களும் எதிர்தரப்பு பகுதிகள் மீது பீரங்கித் தாக்குதல்களை நடத்தினுர்கள்.

குடியிருப்புப் பகுதிகளின் மீது கண்மூடித்தனமாக நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களில் பெருமளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டது.

பேருட்டின் தென் புற நகர்ப் பகுதிகள் முதல் கிறிஸ்தவர்கள் வசிக்கும் பகுதிகள் வரை இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

கடந்த பெப்ரவரி மாதம் முஸ்லிம் மக்கள் படையினருக்கும், இராணுவத்திற்கும் இடையே பலத்த சண்டை நடைபெற்றது என்பது ஞாபகம் இருக்கலாம்.

முஸ்லிம்களின் மேற்கு பேருட்டில் உள்ள அமெரிக்க பல்கலைக் கழக மருத்துவமனையில் 75 சடலங்கள் சேர்க்கப்பட்டன. 75 பேர் சிகிச்சை பெற்றுர்கள்.

கிறிஸ்தவ தரப்பில் ஜூனியா துறைமுகப் பகுதியில் 6 பேர் மாண்டார்கள் என்றும், 10 பேர் படுகாயமுற்றுர்கள் என்றும் "வாயிஸ் ஒவ் லெபனுன்" வானெலி செய்தி ஒலிபரப்பியது. பேருட்டைச் சூழவுள்ள பகுதிகளில் மேலும் இருவர் கொல்லப்பட்டார்கள் என்றும் 43 பேர் காயமுற்றுர்கள் என்றும் அது தெரிவித்தது. (ண)

# சூழல் பாதிப்புற வர்த்தகர்களும் காரணம்

## கண்டி மேயர் கருத்து

கண்டி, ஜூன் 12

"கண்டி நகரில் உள்ள வர்த்தகர்கள் பலரும் சிறந்த ஆதாயத்தைப் பெறுகிறார்கள். அப்படி இருந்தும் தாம் நடத்தும் வியாபாரத் தலங்களைப் புனிதமாக வைத்திருப்பதில்லை சிலர் பொறுப்பற்ற முறையில் குப்பை கூளங்களை எல்லாம் வீதிகளில் கொட்டி வருகின்றனர். இதனால் சூழல் பெரும் அளவில் பாதிக்கப்படுகின்றது"

இப்படிக் கூறினார், கண்டி மேயர் திரு. திலக் ரத்னாயக்கா.

கண்டி ஜோர்ஜ் ஈ. டி. சில்வா பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உலக சூழல் பாதுகாப்புத் தினத்தையொட்டிய நிகழ்ச்சியின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கண்டி மாவட்ட சூழல் பாதுகாப்பு உபகுழு இதனை ஒழுங்கு செய்திருந்தது.

அங்கு மேயர் தொடர்ந்தும் பேசுகையில் கூறியதாவது:—

"சூழலைப் பாதுகாப்பது அனைவரினதும் கடமை. அதே போன்று அதன் மூலம் பயன் பெறுவதிலும் மனிதன் முன் நிற்க வேண்டும். மனிதன் அறியாமை காரணமாகவே சூழலைப் பாழாக்கி விடுகின்றான். இது சமூக விரோதச் செயலாகும்.

இத்தகைய சூழல் அழிவில் இருந்தும் மனிதனைப் பாதுகாத்துக் கொள்ள அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்"

இவ்வாறு அவர் கூறினார்.

கண்டி அரசாங்க அதிபர் திரு. ஏ. பி. தமுனுபொல பேசுகையில் கூறியதாவது—

"சூழல் ஒழுங்கான முறையில் அன்றி மனிதன் வாழ இயலாது என்பதை அனைவரும் அறிவார்கள். அப்படி தெரிந்து கொண்டே இன்று பலர் சூழலை மாசுபடுத்துகின்றனர்.

நீர், நிலம், வளி அனைத்துமே சூழலில் உள்ள செல்வங்களாகும்.

இவற்றை மாசுபடுத்தும் பொழுது மனிதன் தாமாகவே பாதிக்கப்படுகின்றான்.

எமது எதிர்காலப் பரம்பரையினரைக் கருத்திற் கொண்டு சூழல் மாசுபடுவதைத் தடுத்து நிறுத்துவது அவசியமாகும்.

இவ்வாறு தமுனுபொல கூறினார்.

(எ–105)

## வத்தேகமயில் தமிழ்த் தின விழா

கண்டி, ஜூன் 12

வத்தேகம தமிழ் வட்டார பாடசாலைகளுக் கிடையிலான தமிழ்த்தின விழா சிறப்பாகக் கொண்டாடப்பட இருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளை வட்டாரக் கல்வி அதிகாரி மேற்கொண்டிருக்கிறார்.

வட்டாரக் கல்வி அதிகாரி ஜனாப் ஐ. எம். தாஹிர் தலைமையில் இயங்கும் இவ்விழா அமைப்பு தொடர்பான குழுவுக்கு செயலாளராக அதிபர் திரு. தேவதாஸன் ஜெயசிங் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஆரம்ப விழா நிகழ்வுகள் மூன்று உப வட்டாரங்களில் இடம் பெறும்.

இவை பன்வில விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், மதினு மத்திய கல்லூரி, கெங்கல்ல தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெறும் (எ–105)

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில்

# இவ்வாண்டில் 7,000 வீடுகள்

## $3\frac{1}{4}$ கோடி ரூபா செலவில் திட்டம் அமுல்

மாத்தறை, ஜூன் 12

பத்து லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ், இந்த வருடம் மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் 6,060 வீடுகளை நிர்மாணிப்பதற்கு, தேசிய வீடமைப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த மூன்று மாவட்டங்களிலும் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்திற்காக உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு, 3 கோடி 28 லட்சத்து 29 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.


இந்த திட்டத்தின் கீழ் காலி மாவட்டத்திலே அதிகமான வீடுகள் நிர்மாணிக்கப்படவிருக்கின்றன. இம் மாவட்டத்தில் 3,150 வீடுகள் நிர்மாணிக்கப் படும். இதற்காக ஒரு கோடி 46 லட்சத்து 47 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மாத்தறை மாவட்டத்தில் நிர்மாணிப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள வீடுகள் 2,230 ஆகும். இதற்காக ஒரு கோடி 3 லட்சத்து 70 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்றது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 1,680 வீடுகள் கட்டப்படும். இதற்காக 78 லட்சத்து 12 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வீடுகள் அனைத்தையும் இந்த ஆண்டு இறுதிக்குள் நிர்மாணித்து முடித்து விடுவதற்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பிராந்திய அலுவலகங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

(ப–25)



தேசிய கவுன்சில் வை. எம். எம். ஏ. இயக்கத்தின் பொலன்னறுவை மாவட்ட சம்மேளன அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் சட்டத்தரணி ஜனாப் ஏ. எல். தாஹா நஜிமுதீன் தலைமையில் நடைபெற்றது.

பொலன்னறுவை, முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட தேசிய கவுன்சில் பணிப்பாளர் நாயகம் அல்ஹாஜ் பீ. ஏ. ஹுஸைன்மியா உரையாற்றுவதைக் காண்க. (எ–217)

[படம்: ஏ. எல். எம். சலீம்]

# மின்சாரத்தை களவாகப் பாவித்தாராம்

## வர்த்தகருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூன் 13

மின்சாரத்தைக் களவாகப் பாவித்ததாகக் கூறப்படும் பிரபல வர்த்தகர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது—

கடவத்தையைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவர் தமது வர்த்தக நிறுவனத்தின் மின்சார நிலுவைக் கட்டணமாக 62 ஆயிரத்து 602 ரூபா 26 சதம் செலுத்த வேண்டி இருந்தது.

அவர் அதனைச் செலுத்தத் தவறியமையினால் இலங்கை மின்சார சபை, மேற்படி வர்த்தக நிறுவனத்துக்கான மின்சார இணைப்பை சில மாதங்களுக்கு முன்னர் துண்டித்தது.

எனினும் அவர் தாம் ஜெனரேட்டரைப் பயன்படுத்தி மின்சாரத்தைப் பாவிப்பதாகக் கூறி இலங்கை மின்சார சபையின் இணைப்பிலிருந்து களவாக மின்சாரத்தைப் பெற்றுப் பாவித்து வந்துள்ளார்.

இதனை அறிந்த பொலீஸார் பிரஸ்தாப வர்த்தகரை கம்பஹா நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். கம்பஹா நீதிமன்ற மாஜிஸ்திரேட் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இலங்கை மின்சார சபையின் பிரதான உள்ளூர், கணக்காளர் திரு. வீரசிங்க, திடீர் பரிசோதனை அதிகாரி திரு. ரூபன் விக்கிரமசிங்க, கடவத்தை பிரதேச மின்சார பொறியியலாளர் திரு. சமரசிங்க ஆகியோர் மேற்கொண்ட திடீர் சோதனையின் மூலமே சம்பந்தப்பட்ட வர்த்தகர் கைது செய்யப்பட்டார்.

மின்சாரக் களவு தொடர்பான புதிய சட்ட விதிகளின் கீழ் மின்சாரத்தைக் களவாகப்பாவிப்போருக்கு 5000 ரூபா முதல் 10000, ரூபா வரையிலான அபராதமும், ஆறுமாத சிறைத் தண்டனையும் வழங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ–11)

# மக்களும் பதவியும்

## தலைவராக தெரிவு

வாழைச்சேனை, ஜூன் 12



வாழைச்சேனை ஹிஜ்ரா நகரைச் சேர்ந்த ஜனாப் வி. எஸ். இப்ராகிம் ஹிஜ்ரா நகர் கிராம முன்னேற்ற அபிவிருத்திச் சங்கத் தலைவராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

இவர் ஹிஜ்ரா நகர் குர்ஆன் பாடசாலைத் தலைவரும், முன்னாள் ஜும்ஆப் பள்ளி வாசல் பரிபாலன சபை உப தலைவரும், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமாவார்.

ஹிஜ்ரா நகர் குடியேற்றத்தில் முக்கிய பங்கெடுத்துக் கருமமாற்றிய இவர் சிறந்த சமூக சேவையாளருமாவார். (எ–319)

## கிராமோதய சபைத் தலைவராக மீண்டும் தெரிவு

எருக்கலம்பிட்டி, ஜூன் 12

எருக்கலம் பிட்டிப் பகுதி கிராமோதய சபைத் தலைவராக ஜனாப் எம். எம். இபுறுகீம் மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரி ஆசிரியராகக் கடமையாற்றும் இவர், இப்பகுதியிலுள்ள பல முன்னேற்றச் சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கின்றார்.

எருக்கலம்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜனாப் எம் எம். இப்றுகீம் எருக்கலம்பிட்டி ஒன்றிணைக்கப்பட்ட ஐ. தே. கட்சியின் உப தலைவருமாவார். (எ–74)

## நிர்வாகிகள்

கண்டி, ஜூன் 12

கல்ஹின்னை லொயிட்ஸ் மென்பந்து கிரிக்கெட் விளையாட்டுக் கழக அங்குரார்ப்பண கூட்

## மின்வெட்டு அடிக்கடி அமுல்

அட்டுலுகம, ஜூன் 12

அட்டுலுகம, தியத்தலாவை அஹுறுகொல ஆகிய இடங்களில் அடிக்கடி மின்வெட்டு

தோ. தொ. சம்பள உயர்வு குறித்து

# 16 கோரிக்கைகள் அடங்கிய

## அறிக்கை முத்தரப்புக் குழுவிடம்

# 16 கோரிக்கைகள் அடங்கிய

## அறிக்கை முத்தரப்புக் குழுவிடம்

## கையளிக்கப்பட்டதாக நடேசன் தகவல்

கொழும்பு, ஜூன் 13

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு சம்பந்தமாக பரிசீலனை செய்து வரும் முத்தரப்புக் குழுவிற்கு தோட்டத் தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டியின் அமைப்பாளர் திரு. எஸ். நடேசன் 16 கோரிக்கைகள் அடங்கிய அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருக்கிறார்.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

1981 ஆம், 1983 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டங்களின் மூலம் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 170 ரூபா சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

மாதம் 24 நாட்கள் வேலை என்ற அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 5.08 சதவீத சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும்.

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கு 2 ரூபா வீதம் தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். 24 நாள் சம்பள அடிப்படையில் ஒரு புள்ளிக்கு 8,3 சதவீதம் வழங்குதல்.

ஒரு வருட சேவைக்கு இரண்டு வார சம்பளம் என்ற அடிப்படையில் சேவைக் காலப் பணம் வழங்கப்பட வேண்டும்.

பெண் தொழிலாளர்களுக்கு பிரசவத்தின் பின்னும் முன்னும் ஆறுவார விடுமுறை சம்பளத்துடன் வழங்குதல்.

ஏனைய தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பொது விடுமுறை 9 நாள், சுகயீன விடுமுறை இரண்டு வாரம், சில்லறை விடுமுறை 7 நாட்களும் சம்பளத்துடன் வழங்க வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களும் தோட்டச் சேவையாளர்களும் தொழில் நீதிமன்ற அப்பீல் தீர்ப்புகள் வழங்கப்படும் வரை அவர்கள் குடியிருக்கும் வீடுகளில் தொடர்ந்து குடியிருக்க அனுமதித்தல்.

தோட்ட சேவையாளர்களுக்கு தற்போதைய அடிப்படை சம்பளத்திலிருந்து 40 சத வீதம் அதிகரிக்கப்பட வேண்டும்.

மேற்படி முக்கிய அம்சங்களைக் கொண்ட அறிக்கையை முத்தரப்புக் குழுவின் தலைவரும் தொழில் அமைச்சருமான கப்டன் சி. பி .ஜே. செனவிரத்னவிடம், திரு. நடேசன் சமர்ப்பித்திருக்கிறார். (எ–ய)

# விவசாயத்தில்

## தொழில் நுட்ப முறையை

## பின்பற்ற இளைஞருக்கு அறிவுரை

குருநாகல், ஜூன் 12

பழைய விவசாய முறைகளை கைவிட்டு விட்டு தொழில் நுட்ப ரீதியிலான முறைகளை நடைமுறைப் படுத்த வாலிபர்கள் முன்வர வேண்டும்.

இவ்வாறு குருநாகல் மாவட்ட அமைச்சர் திரு காமினி ஜெயவிக்ரம பெரேரா கூறினார்.

குளியாப்பிட்டிய தொகுதியில் இளைஞர், யுவதிகளுக்கிடையில் விவசாயப் போட்டியொன்று நடத்தப்பட்டது.

வெற்றிபெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் வைபவம் குளியாப்பிட்டி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

குருநாகல் மாவட்ட அமைச்சர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

எமது நாட்டில் விவசாய அபிவிருத்திக்குத் தேவையான சாதனங்கள் இருந்தும் தொழில் நுட்ப ரீதியிலான முறைகள் பயன்படுத்தப்படுவதில்லை. இதனால் நாடு இன்னும் விவசாயத் துறையில் பின்தங்கி இருக்கிறது.

விவசாயத் துறையில் ஆர்வம் உள்ள வாலிபர்கள், யுவதிகளுக்கு மாவட்ட ரீதியில் விவசாயப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அவர் கூறினார்.

கல்விச் சேவைகள் அமைச்சர் திரு. லயனல் ஜயதிலக்கவும் பேசினார். (எ–138)

# கணவர் பிரிவு

## துயர் தாங்காத மனைவி

## ரயில் முன் பாய்ந்து தற்கொலை

பதுளை, ஜூன் 12

போரதையில் இருந்த வேளையில் சிலரால் தாக்கப்பட்டு கணவர் உயிரிழந்ததைத் தாங்க முடியாத மனைவி ஓடும் ரயிலுக்கு முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் பதுளை தெய்யன்னவில என்னுமிடத்தில் நடைபெற்றது.

ஜொனி என்றழைக்கப்படும் பி. எச். தயாநந்த என்பவர் மது போரதையில் சிலருடன் சண்டையிட்டதாகவும் இதன் பின்பு அவர் பலத்த காயங்களுக்கு இலக்கானதாகவும் —

இந்தக் காயங்களினால் அவர் மறுநாள் மரணமானதாகவும் விசாரணைகள் மூலம் தெரிய வந்தன.

மரணச் சடங்குகள் முடிந்த மறுதினம் இவரது மனைவியான ஜீ. சுஜீவா என்பவர் தற்கொலை செய்து கொள்ளும் நோக்கமுடன் ஓடும் ரயிலுக்கு முன்னால் பாய்ந்துள்ளார்.

படுகாயங்களுடன் பதுளை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். இரண்டு நாட்களுக்குப்பின் அவர் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

மனைவியின் மரணம் குறித்து மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார்.

பதுளை பொலீஸார் தொடர்ந்து புலன் விசாரணைகளில் ஈடுபட்டிருக்கின்றனர். (எ–37)

# தராவிஹ்

## தொழுகை

## நடத்த வசதி

பலாங்கொடை, ஜூன் 12

பலாங்கொடை இஸ்லாமிய சங்கம் கடந்த வருடங்களைப் போல இவ்வருடமும் புனித ரமழான் மாதத்தில் பலாங்கொடைப் பகுதியிலுள்ள சகல பள்ளிவாசல்களிலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தராவிஹ் தொழுகை வசதியினை ஒழுங்கு செய்திருக்கின்றது.

பலாங்கொடைப் பகுதியிலுள்ள திகதுரைப் பள்ளிவாசல், தும்பகொட பள்ளிவாசல், இரிமெடிதென்னை தக்கியா, டவுண் தக்கியா – தெகிகஸ்தலாவ தக்கியா, ஆகிய இடங்களில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தராவிஹ் தொழுகையின் நிறைவேற்றிக் கொள்ள சகல ஒழுங்குகளையும் பலாங்கொடை இஸ்லாமிய சங்கம் செய்து கொடுத்திருக்கிறது. (எ–38)

# அடிக்கடி அமுல்

அட்டுளுகம, ஜூன் 12

அட்டுளுகம, தியத்தலாவை ஊஹகொல ஆகிய இடங்களில் அடிக்கடி மின்வெட்டு அமுல் நடத்தப்படுகின்றது.

குறிப்பாக தியத்தலாவைப் பிரதேசத்தில் "ஸஹர்" நேரத்தில் மின்சாரம் துண்டிக்கப்படுவதால், இப்பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளனர்.

தியத்தலாவை மின்சார நிலையத்திற்குட்பட்ட இப்பகுதிகளில் இவ்வாறு மின் வெட்டு நடைபெறுவது குறித்து முஸ்லிம்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (எ–100)

...சாரத்தைப் பாவிப்பதாகக் கூறி இலங்கை மின்சார சபையின் இணைப்பிலிருந்து களவாக மின்சாரத்தைப் பெற்றுப் பாவித்து வந்துள்ளார்.

...10000, ரூபா வரையிலான அபராதமும், ஆறுமாத சிறைத் தண்டனையும் வழங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ–11)

# பண்டாரவளையில்

## ஆசிரியர்

## பற்றாக் குறை

பண்டாரவளை, ஜூன் 12


பண்டாரவளை கல்விப் பிரதேசத்தில் உள்ள தமிழ் முஸ்லிம் பாடசாலைகளில் 383 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது.

சுமார் அறுநூறு ஆசிரியர்கள் இருக்க வேண்டிய இவ்வட்டாரத்தில் 217 ஆசிரியர்களே பணிபுரிகின்றனர்.

விஞ்ஞான, கணித, மௌலவி ஆசிரியர்களுக்கே பெருமளவு பற்றாக்குறை நிலவுகின்றது. (எ–39)

# விடுதிக் கட்டடம்

## அவல நிலையில்



கடந்த சூறாவளியின் போது சேதமுற்ற தியாவட்டுவான் முஸ்லிம் கலவன் பாடசாலை ஆசிரியர் விடுதிக் கட்டடத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

இதுவரையும் புனரமைக்கப்படாதிருக்கும் இக் கட்டடம் பற்றி தியாவட்டுவான் முஸ்லிம் விவாகப் பதிவாளரும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினருமான ஜனாப் எம். ஐ. அகமது லெப்பை கல்விப் பகுதியினருக்கு பல தடவைகள் முறையிட்டுள்ளார்.

ஆயினும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாது மேற்படி கட்டடம் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது. (எ–319)

டிக்கோயாவில்

# மூடப்பட்டிருந்த பாடசாலை:

## திறக்கும் முயற்சியில் தோட்டத்துரை

மஸ்கெலியா, ஜூன் 12

டிக்கோயாவில் மூடப்பட்டிருந்த பாடசாலையை மீண்டும் திறக்க தோட்டத் துரை உதவி செய்ய முன் வந்திருக்கிறார். பழுதடைந்து உடைந்து போன கட்டடத்தைத் திருத்தி தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி வசதிக்கு வேண்டிய ஏற்பாடுகளையும் அவர் மேற்கொண்டிருக்கிறார்.

டிக்கோயா நில்டன் தோட்டப் பாடசாலை 1977 இல் அரசினால் கையேற்கப்பட்டது. அப் பாடசாலை நோர்வூட் தமிழ் வித்தியாலயத்தோடு இணைக்கப்பட்டிருந்தது. அங்கு படிப்பித்த ஆசிரியர், பயிற்சி பெறுவதற்காக ஆசிரியர் கலாசாலைக்குச் சென்றதை அடுத்து அந்தப் பாடசாலை மூடப்பட்டது.

அங்கு படித்த மாணவர்கள் நோர்வூட் தமிழ் வித்தியாலயத்தில் சேர்க்கப்பட்டார்கள்.

இதனால் அந்தப் பிள்ளைகள் சுமார் இரண்டு மைல் தூரம் நடந்து சென்று சிரமப்பட்டுப் படிக்க வேண்டியிருந்தது.

மூடப்பட்ட நில்டன் தோட்டப் பாடசாலைக் கட்டடம் பழுதாகி உடைந்த நிலையில் இருந்தமையால், அந்த இடத்தில் தோட்ட நிர்வாகம், பிள்ளை பராமரிப்பு நிலையம் ஒன்றை அமைக்க முயற்சித்தது.

இதனையறிந்த நோர்வூட் தமிழ் வித்தியாலய அதிபர் திரு. சி. கனகமூர்த்தி நோர்வூட் பொலீஸில் புகார் செய்தார். நோர்வூட் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. என். ஹெட்டியாராச்சி, தோட்டத் துரை திரு. ஏ. பீ. தென்னகோன், இணைப்புப் பாடசாலை அதிபர் திரு. சி. கனகமூர்த்தி ஆகியோரை அழைத்து சமரச பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

இதனையடுத்து தோட்டத் துரை பழுதாகி உடைந்து போன பாடசாலைக் கட்டடத்தைப் புனரமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கிறார்.

தோட்டத் தொழிலாளர்களும் தம்மாலான பண உதவிகளைச் செய்ய முன் வந்திருக்கின்றனர். பாடசாலைக் கட்டட வேலைகள் முற்றுப் பெற்றதும் கல்வித் திணைக்களம் புதிய ஆசிரியர்களை நியமிக்கும் வரை தொண்டர் ஆசிரியரைக் கொண்டு பாடசாலையை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (எ–[illegible])

(எ–74)

# நிர்வாகிகள்

கண்டி, ஜூன் 12

கல்ஹின்னை லொயிட்ஸ் மென்பந்து கிரிக்கெட் விளையாட்டுக் கழக அங்குரார்ப்பண கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:— ஜனாப் எஸ். எம். இம்தியாஸ், செயலாளர்:— ஜனாப் எஸ். எச். எம். நஹீம், பொருளாளர்:— ஜனாப் எம். ஸி. நிஷாம்தீன், காப்டன்:— ஜனாப் கே. எம். காமில், உப காப்டன்:— ஜனாப் ஜே. எம். பாகீர்.

நிர்வாக உறுப்பினர்கள்:— ஜனாப் கே. எம். நஸீர், திரு. மகிந்தபெரேரா, ஜனாப்கள் எஸ். எச். எம். நிஷாம், எஸ். எச். எம். முனப்பர், எம். இஸ்ட், எம். ஸக்கி, எஸ். எச். எம். நஸீர், எம். ஜே. எம். நஸார், எம். ஜே. எம். முனஸ், எம். எச். எம். பஹ்மி.

(எ–105)

★

சம்மாந்துறை, ஜூன் 12

மல்வத்தைக் கிராமோதய சபைப் பிரிவிலிருக்கும் ஹிஜ்ராபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் விவரம்:—

தலைவர்:— ஜனாப் எம். ஆதம்பாவா, துணைத் தலைவர்கள்:— ஜனாப் எம். ஏ. மஜீத், ஐ. அகமது லெவ்வை, செயலாளர்:— ஜனாப் ஐ. எல். ஏ. முகையதீன், துணைச் செயலாளர்:— ஏ. அப்துல் மஜீத் பொருளாளர்:— எம். அகமது லெவ்வை, கணக்காய்வாளர்:— எம். கலந்தர் லெவ்வை.

நிர்வாக சபை உறுப்பினர்கள்:— ஜனாப்கள் ஏ. அலியார், ஏ. அகமது லெவ்வை, எம். தம்பி லெவ்வை, எம். றஷீத், எம். ஜனித்தம்பி, ஏ. முகம்மதிஸ்மாயீல், ஏ. எம். பஸீல்.

போஷகர்:— சம்மாந்துறை எம். பி. ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத்.

(எ)

# பிரதேச சபை

## தலைவர் தெரிவு

தலைமன்னார், ஜூன் 12

முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபைத் தலைவராக ஜனாப் எம் ஒபார் தெரிவு செய்யப்பட்டார்.

இத்தெரிவுக் கூட்டம் சிலாவத்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. நீலகண்டன் தலைமையில் நடைபெற்றது.

(எ–286)

## வானொலி

13—6—1984

காலை —

5.30 நாதாஞ்சலி
5.35 தோத்திரமாலை – ஐப்பி லியப்பன் சுப்ரபாதம்
6.00 சைவநற்சிந்தனை
6.05 இஸ்லாமிய நற்சிந்தனை
6.10 பௌத்த நற்சிந்தனை
6.15 நன்னெறி
6.30 செய்திகள்
6.50 மெல்லிசைப் பாடல்கள்
7.00 இசையமுதம்
7.30 மாகாணச் செய்திகள்
7.45 திருவாசகம் – ப. முத்துக் குமாரசாமி சர்மா
8.15 முஸ்லிம் நிகழ்ச்சி
8.45 பௌத்த வாசகம்
9.00 நாதவினோதம்
9.15 பக்தி மஞ்சரி
9.45 தம்ம உரையாடல்
10.00 கவியரங்கு — "பசி அரக்கனின் பாடு சரிந்தது" – பாண்டியூரன்
10.30 "பற்றறுத்த பைங் கொடி" (பொஸன் தின விசேஷ சித்திரம்)
11.00 இசைக் கச்சேரி – மஹாராஜபுரம் சந்தானம்

மாலை —

6.00 செய்திகள்
6.20 இப்தார் நிகழ்ச்சி
6.35 அருளமுதம்
7.05 முஸ்லிம் நிகழ்ச்சிகள்

இரவு —

8.00 உலகச் செய்திகள்
8.10 களத்துமேடு
8.25 நாடகம் – "உறவுகள்" அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை
8.40 உதயமஞ்சரி
9.00 செய்திகள்
9.30 மெல்லிசைப் பாடல்
9.45 அகில இந்திய வானொலி நிலைய ஒலிப்பதிவு – இசைக் கச்சேரி ஸ்ரீ. என். பாலசுப்ரமணியம்.

## டெலிவிஷன்

ரூபவாஹினி

4.30 நோ யுவர் கண்ட்ரீ
4.35 கிரேட் ஸ்பேஸ் கோஸ்டர்
5.00 மிஹிந்தலை பற்றிய இசை நிகழ்ச்சி
5.15 "பிலி சரண" சிறுவர் நிகழ்ச்சி
5.45 புண்ணிய பூமி – விவரணச் சித்திரம்
6.00 நோ யுவர் பொடி
6.20 பௌத்த பேச்சு (தமிழ்)

# இன ஒற்றுமைக்கு விளையாட்டு சிறந்த எடுத்துக்காட்டு

## வட்டாரக் கல்வி அதிகாரி கருத்து

மூதூர், ஜூன் 12

மூதூர் பகுதியில் தமிழர்களும், சிங்களவர்களும், முஸ்லிம்களும், சகோதரத்துவ உணர்வுடன் ஒற்றுமையுடன் வாழ்கிறார்கள் என்பதற்கு இவ்விளையாட்டுப் போட்டி சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்த நிலை நாட்டின் ஏனைய பகுதிகளிலும், உருவாக வேண்டும்.

இவ்வாறு மூதூர் வட்டாரக் கல்வி அதிகாரி ஜனாப் ஏ. வி. முகம்மது தோப்பூர், கிளிவெட்டி, சேருவில வட்டாரப் பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

தோப்பூர் அல்–ஹம்பரு மகா வித்தியாலய மைதானத்தில் மேற்படி விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

கல்வி அதிகாரி தொடர்ந்து பேசியபோது,

மாணவர்களின் உளவளர்ச்சிக்கு ஏட்டுக் கல்வி உதவுவது போல் உடல் வளர்ச்சிக்கும் விளையாட்டுக் கல்வி மிக்க உதவி புரிகிறது.

விளையாட்டுத் துறையில் ஈடுபாடுடைய மாணவர்கள் எல்லாத் துறைகளிலும், இலகுவாக உயர்வடைய வாய்ப்பேற்படுகிறது.

அரசியல் பிரமுகர்கள், சினிமா நடிகர்கள், அறிஞர் திலகங்கள் இவர்களைப் போல் நீங்காப் புகழைப் பெற்றுப் பொது மக்கள் மத்தியில் பிரபல்யம் பெறுபவர்கள் விளையாட்டு வீரர்களே.

மாணவப் பருவத்தில் சிறந்த விளையாட்டு வீரர்களாகத் திகழ்ந்த பலர் பின்னர் நாடாளும் தலைவர்களாக மாறி திறமைமிக்க மதி நுட்பத்துடன் தம் நாட்டை ஆண்டு வருவதை இன்று நாம் காண்கிறோம்.

போட்டியில் பங்கு கொள்வோர், அனைவரும், வெற்றி பெற முடியாது. ஆனால் வெற்றிக்கு முயற்சி தேவை என்பதை ஒவ்வொரு மாணவனும் உணர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இவ்விளையாட்டுப் போட்டியில் 24 பாடசாலைகள் பங்கு பற்றின.

போட்டி முடிவுகள்:

1ஆம் இடம். தோப்பூர் அல்–ஹம்ரு மகா வித்தியாலயம்.

2ஆம் இடம்: மகாவலிகம மகா வித்தியாலயம்.

3ஆம் இடம். ஜின்னநகர் அல்–தாஜ் மகா வித்தியாலயம்.

(ந–186)

## விளையாட்டுப் பகுதி

## விளையாட்டுத் துறையில் மட்டக்களப்பு புகழ் பெற்றது

### பிரதம கல்வி அதிகாரி கருத்து

வவுணதீவு, ஜூன் 12

மட்டக்களப்பு மாவட்டம் விளையாட்டுத் துறையில் அகில இலங்கை ரீதியில் புகழ் பெற்று விளங்குகின்றது. அப்புகழில் பெரும் பகுதி புனித மிக்கேல் கல்லூரி மாணவர்களுக்கே சேர வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பிரதம கல்வி அதிகாரி திரு. த. கிருபைராஜா தனது உரையில் குறிப்பிட்டார்.

வெபர் விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு கல்லூரி அதிபர் சா. இ. கமலநாதன் தலைமை வகித்தார்.

கல்வி அதிகாரி தொடர்ந்து உரையாற்றுகையில்,

புனித மிக்கேல் கல்லூரி மாணவர்கள் அகில இலங்கை ரீதியில் கூடைப் பந்தாட்டப் போட்டியில் இலங்கையின் பிரதான கல்லூரிகளை தோற்கடித்து சாதனைகளை நிலைநாட்டி வருகின்றார்கள். இதனால்தான் எமது மாவட்டத்திற்கு பெருமைகள் கிடைக்கின்றன.

பாடசாலை பருவத்தில் அறிவு விருத்திக்கு கல்வி பயன்படுகின்றது.

ஆனால் ஒரு மாணவன் ஒழுக்கம் – கட்டுப்பாடு – ஒற்றுமை – சகிப்புத்தன்மை ஆகியவற்றை கொண்டவனாக உருவாக வழிவகுப்பது விளையாட்டுத் துறைதான் என்பதை நாம் மறந்து விடக் கூடாது என்றார்.

இவ்வைபவத்தில் மட்டக்களப்பு – திருமலை மறை மாவட்ட ஆயர் கிங்சிலி சுவாம்பிள்ளை, கிழக்குப் பிராந்தியப் பொலீஸ்மா அதிபர் திரு. கிங்சிலி விக்கிரமசூரியா, மட்டக்களப்பு பொலீஸ் அதிபர் திரு. விக்டர் பெரேரா உட்பட பலர் கலந்து கொண்டனர். (ந–318)



திருக்கோவில் கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த விநாயகபுரம் அரசினர் தமிழ் மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் குறிஞ்சி இல்லம் முதலிடத்தைப் பெற்றது.

இப்போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்முனை கல்வி மாவட்ட பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம். ஐ. எம். சரீப், வெற்றிபெற்ற அணியின் தலைவருக்கு வெற்றிக் கேடயத்தைப் பரிசளிப்பதைப் படத்தில் காண்க.

[படம்: ஏ. எஸ். எம். சலீம்]

(ந–217)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் பயிற்சிக்காக அழைப்பு

கொழும்பு, ஜூன் 13

ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனம், தனது உதை பந்தாட்ட மத்தியஸ்தர்கள் பரிமாற்றப் பயிற்சித் ...

... யளித்தது என ஆசிய உதை பந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் கூறியுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் உதை பந்தாட்ட பயிற்சி பெற விரும் ...

## சாரணர்களுக்கு பயிற்சி முகாம்

கொழும்பு, ஜூன் 13

வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் அண்மையில் சாரணர் தலைவர்களுக்காக 3 நாளைய பயிற்சி முகாம் ஒன்று ...

... ணன், உதவி மாவட்ட ஆணையாளர் டி. நடராசா, குழுச் சாரணர் தலைவர் மா. புவனேந்திரன் ஆகியோர் முன்னின்று பயிற்சி முகாமை சிறப்பாக நடத்தினர்.

5.15 "பிலி சரண" சிறுவர் நிகழ்ச்சி
5.45 புண்ணிய பூமி — விவரணச் சித்திரம்
6.00 நோ யுவர் பொடி
6.20 பௌத்த பேச்சு (தமிழ்)
6.30 "நாடு போற்ற வாழ்க" — கடைசி பாகம்.
6.55 செய்திகள் — தமிழ்
7.15 "சந்தக சுதாவக்" — நாடகம் (மறு ஒளி பரப்பு)
8.15 செய்திகள் — சிங்களம்
8.45 அனுசாசன
9.30 செய்திகள் — ஆங்கிலம்
9.50 "வெதப ஜாதகய"
10.20 பௌத்த பேச்சு (ஆங்கிலம்)
10.30 உலகச் செய்திகள்

## ஐ. டி. என்.

6.31 த இலக்ட்ரிக் கோ
7.00 சித்ர கீத
7.30 மஹாத்மா காந்தி
8.00 த லூசி சோ
8.30 பௌத்த பேச்சு
8.45 பக்தி கீத
9.00 சர்வைவல்
9.30 செய்திகள் — ஆங்கிலம்
9.45 எலரி குயீன்.

## முதல் வருட மாணவர் வெற்றி

கொழும்பு, ஜூன் 13

தலவாக்கொல்லை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டி ஒன்றில் முதல் வருட மாணவர்கள் இரண்டாம் வருட மாணவர்களை 3–1 கோல்களால் தோற்கடித்தனர்.

இப்போட்டிக்கு கலாசாலையின் உடற்பயிற்சி விரிவுரையாளர் என். பத்மநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

கலாசாலையின் விளையாட்டுக் கழகம் இப்போட்டியை ஏற்பாடு செய்தது. (ந-ய)

கொழும்பு, ஜூன் 13

ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனம், தனது உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் பரிமாற்றப் பயிற்சித் திட்டத்தின் கீழ் மூன்று உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களை அனுப்பி வைக்குமாறு இலங்கை உதை பந்தாட்டக் கட்டுப்பாட்டுச் சபைக்குத் தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் உதை பந்தாட்ட மத்தியஸ்தர்கள் ஸ்பெயின், மெக்ஸிகோ, ஒல்லாந்து ஆகிய நாடுகளில் மூன்று மாத கால பயிற்சியினைப் பெற முடியும்.

இவ்வித பயிற்சித் திட்டம் இரு வருடங்களுக்கு முன் நடைபெற்ற போது சிறந்த வெற்றியளித்தது என ஆசிய உதை பந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் கூறியுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் உதை பந்தாட்ட பயிற்சி பெற விரும்பும் மத்தியஸ்தர்கள் இலங்கை உதை பந்தாட்ட கட்டுப்பாட்டுச் சபை தலைவர் எப். ஏ. யாசீனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் மத்தியஸ்தர்களின் பெயர்கள் ஜூன் 30ஆம் திகதிக்கு முன் ஆசிய உதை பந்தாட்ட சம்மேளனத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும். (ந)

வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் அண்மையில் சாரணர் தலைவர்களுக்காக 3 நாளைய பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

சாரணர் குழுக்களைக் கொண்ட 6 பாடசாலைகளிலிருந்து 43 சாரணர் அணித் தலைவர்கள் இப்பயிற்சி முகாமில் பங்குபற்றினர்.

பயிற்சித் தலைவராக வெளிக்கள ஆணையாளர் திரு. பி. சிறிஸ் கந்தராசா கடமையாற்றினர்.

பயிற்சியாளர்களாக மாவட்ட ஆணையாளர் க. கோபாலகிருஷ்ணன், உதவி ஆணையாளர் டி. நடராசா, குழுச் சாரணர் தலைவர் மா. புவனேந்திரன் ஆகியோர் முன்னின்று பயிற்சி முகாமை சிறப்பாக நடத்தினர்.

கிளிநொச்சித் தொகுதியிலுள்ள 14 பாடசாலைகளுக்கு வேலை வார அட்டைகள் வழங்கப்பட்டன. 20 உபயோகித்த கூடாரங்கள் மேற்படி பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

இப்பயிற்சி முகாமுக்கான சகல ஏற்பாடுகளையும் குழுச் சாரணர் தலைவர் மா. புவனேந்திரன் செய்திருந்தார். (ந)

...லய இல்ல விளையாட்டுப் போட்டியில் குறிஞ்சி இல்லம் முதலிடத்தைப் பெற்றது.

இப்போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்...

...யின் தலைவருக்கு வெற்றிக் கேடயத்தைப் பரிசளிப்பதைப் படத்தில் காண்க.

[படம்: ஏ. எல். எம். சலீம்]

(ந-217)

## இங்கிலாந்து வீரர்கள் அறிவிப்பு

லண்டன், ஜூன் 12

நாளை இங்கிலாந்தில் எட்பாக்ஸ்டனில் (பர்மிங்ஹாம்) மேற்கிந்திய அணிக்கெதிராக நடைபெறவுள்ள முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றவுள்ள இங்கிலாந்து அணியின் 12 வீரர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

டேவிட் கவர் (தலைவர்), இயன்பொதம், நிக்குக், போல் டவுன்டன், நீல் பொஸ்டர், கிரஹாம் பவ்லர், அலன் லாம்ப், அன்டி லொயிட், ஜெப் மில்லர், டெரிக் பிரிங்கல், டெரிக் ரெண்டோல், பொப் விலிஸ் ஆகிய வீரர்களே போட்டியில் இங்கிலாந்தின் சார்பாக பங்குபற்றவுள்ளனர். (ந)




சென். தோமஸ் கல்லூரி அணிக்கும் சென். பீட்டர்ஸ் கல்லூரி அணிக்குமிடையே லோங்டன் பிளேஸில் நடைபெற்ற றகர் போட்டியில் இடம்பெற்ற சுவாரஸ்யமான கட்டமொன்றைப் படத்தில் காண்க.

ஆர்ச்பிஷோல்ட் கிண்ணத்துக்காக நடைபெற்ற இப்போட்டி வெற்றி தோல்வியற்ற நிலையில் முடிவுற்றது. (ந*ச)

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

கொழும்பு, ஜூன் 13

அகில இலங்கை ரீதியில் அணிக்கு ஆறு பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை மலையக சமூக இளைஞர் மன்றமும், யங் பேர்ட்ஸ் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தவுள்ளன.

இப்போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமானின் பெயரில் வெற்றிக் கேடயமும், பத்தாயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்படவுள்ளது.

மேலும் தோட்டப்புறங்களில் கரபந்தாட்ட விளையாட்டை ஊக்குவிக்குமுகமாக அவ்வப் பகுதிகளில் கரபந்தாட்ட சுற்றுப் போட்டிகளை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் நுவரெலியா கெலேகொலையிலுள்ள மலையக சமூக இளைஞர் மன்றத்தின் பொதுச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும். (ந)

## வட்டார பாடசாலை போட்டிகள்

### கிளிநொச்சி

கொழும்பு, ஜூன் 13

கிளிநொச்சி வட்டாரப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் வட்டக்கச்சி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

இப்போட்டியில் பிரதம அதிதியாக முன்னாள் கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி கலந்து கொண்டார்.

போட்டியில் பின்வருவோர் சாம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

ஆண்கள்:

11 வயதுக்குக் கீழ்: த. குணரூபன் (வட்டக்கச்சி ம. வி.).

13 வயதுக்குக் கீழ்: தி. ஜெயசீலன் (இராமநாதபுரம் ம. வி.)

15 வயதுக்குக் கீழ்: த. சிவானந்தராசா (வட்டக்கச்சி ம. வி)

17 வயதுக்குக் கீழ்: தி. ஆனந்தராசா (இந்து மகா வித்தியாலயம்).

19 வயதுக்குக் கீழ்: து. சச்சிதானந்த சிவம் (இந்து மகா வித்தியாலயம்).

பெண்கள்.

11 வயதுக்குக் கீழ். சு. சுகந்தினி (இராமநாதபுரம் ம. வி.).

13 வயதுக்குக் கீழ். த. கவிதா (இராமநாதபுரம் ம. வி.) பா. ஜமுனாதேவி (வட்டக்கச்சி ம. வி).

15 வயதுக்குக் கீழ்: சி. கோமதி (வட்டக்கச்சி ம. வி.) க. தயாரதி (வட்டக்கச்சி ம. வி.).

17 வயதுக்குக் கீழ்: சி. மங்களாதேவி (வட்டக்கச்சி ம. வி.)

19 வயதுக்குக் கீழ். ஜெ. உதயசாந்தி (இராமநாதபுரம் ம. வி.). (ந)

### வெலிகாமம்

வெலிகாமம், ஜூன் 12

ஹக்மன கல்விப் பகுதியின் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் 133 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தை நாரந்தெனிய மத்திய மகா வித்தியாலயம் சுவீகரித்துக் கொண்டது.

இப்போட்டியில் 103 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தை திஹகொட மத்திய மகா வித்தியாலயமும், 59 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தை தெய்யந்தர மத்திய மகா வித்தியாலயமும் சுவீகரித்துக் கொண்டன. (ந-331)

## கழக விளையாட்டு போட்டி

தலைமன்னார், ஜூன் 12

விளையாட்டுத் துறை அமைச்சினால் முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி சிலாவத்துறை பொது விளையாட்டரங்கில் நடைபெற்றது.

முசலி உதவி அரசாங்க அதிபர் திரு. வி. நீலகண்டன் தேசியக் கொடியை ஏற்றி போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

[illegible] அதிகாரி திரு. எம். ஜீவரத்தினம், முசலி பிரதேச சபைத் தலைவர் ஜனுப் எம். ஒப்பார், முசலி விளையாட்டுத் துறை அதிகாரி திரு. ப. எமில்சோசை ஆகியோர் கலந்து கொண்டனர்.

எட்டு கழகங்கள் பங்கு பற்றிய இவ்விளையாட்டுப் போட்டியில் முசலி அலிகார் விளையாட்டுக் கழகம் 74 புள்ளிகளைப் பெற்று சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

முள்ளிக்குளம் றோ. க. த. க. பாடசாலை விளையாட்டுக் கழகம் 67 புள்ளிகளையும், கொக்குப்படையான் சென் ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் 50 புள்ளிகளையும், பூநொச்சி அலிகார் விளையாட்டுக் கழகம் 30 புள்ளிகளையும், சிலாவத்துறை சென் சேவியர் விளையாட்டுக் கழகம் 18 புள்ளிகளையும் பெற்றன.

ஆண்களில் சாம்பியனாக முசலி அலிகார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கே. அப்துல் நவாஸ், பெண்களில் சாம்பியனாக முள்ளிக்குளம் றோ. க. த. க. பாடசாலையைச் சேர்ந்த செல்வி ப. ஆகத்தம்மா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை திருமதி வி. நீலகண்டன் வழங்கினார். (ந-286)

## பாடசாலை றகர்

கொழும்பு, ஜூன் 13

ஆனந்தாக் கல்லூரி றகர் அணிக்கும், நாலந்தாக் கல்லூரி றகர் அணிக்கும் இடையே பொலீஸ் பூங்காவில் நடைபெற்ற றகர் போட்டி 6—6 புள்ளிகளால் வெற்றி தோல்வியற்ற நிலையில் முடிவுற்றது.

மேற்படி இரு கல்லூரிகளுக்கிடையிலான றகர் போட்டி இவ்வருடம் முதல் பி. டி. எஸ். குலரட்ண கேடயத்துக்காக விளையாடப்படுகிறது.

ஆனந்தா அணிக்காக ஜி. வி. சந்திரசிரியும், ஜானக டி சில்வாவும் புள்ளிகளைப் பெற்றனர்.

நாலந்தா அணிக்காக விகும் ஹேவா பத்திரனவும், அஜித் சில்வாவும் புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தனர்.

இப்போட்டிக்கு டோனி மாசிலாமணி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இரு கல்லூரிகளினதும் இரண்டாவது அணிகளுக்கான போட்டியும் 4—4 புள்ளி நிலையில் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. (ந)

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறு தோறும் வெளிவரும்

## உணவு ஆணையாளர் திஸாநாயக்கா

கொழும்பு, ஜூன் 13

புதிய உணவு ஆணையாளராக திரு. ஜி. திஸாநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதி உணவு ஆணையாளராக திரு. திஸாநாயக்கா இதுவரை கடமையாற்றி வந்தார்.

முன்னர் உணவு ஆணையாளராக இருந்த திரு. என். புலேந்திரன் இளைப்பாறியதைத் தொடர்ந்தே, அவ்விடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## வீடியோவில் ஆபாசப் படம்

### 28 பேர் கைது

கொழும்பு, ஜூன் 13

கொழும்பு, ஜெம்பட்டா வீதி வீடொன்றில் சட்ட விரோதமான முறையில் காட்டப்பட்ட ஆபாசத் திரைப்படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த 28 பேரை பொலீஸார் கைது செய்தனர்.

சுமார் பதினெட்டு வயதிற்கும், இருபத்தைந்து வயதிற்கும் இடைப்பட்ட மேற்படி நபர்களில், அரசாங்க கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவரும், கோவில் அர்ச்சகர் ஒருவரும் காணப்பட்டனர் என பொலீஸார் தெரிவித்தனர்.

இத்திரைப்படத்தைக் காட்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட டெலிவிஷன், வீடியோ டெக் என்பவற்றை பொலீஸார் கைப்பற்றினர். அவற்றின் உரிமையாளரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார். (ப-ர)

# ஆபரணத் தொழிலுக்கு ஐரோப்பிய உதவி

## 3 வருட திட்டத்தின் கீழ்

கொழும்பு, ஜூன் 13

இலங்கையின் ஆபரணக் கைத்தொழில் துறைக்கு விரைவில் ஐரோப்பிய பொருளாதார சமூகத்திடமிருந்து தொழில் நுட்ப, சந்தைப்படுத்தும் உதவிகள் கிடைக்க இருக்கின்றன.


ஐரோப்பிய பொருளாதார சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 3 வருடத் திட்டமொன்றின் கீழ் இந்த உதவிகள் கிடைக்கும்.

தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பாவின் பிரபல ஆபரணத் தொழில் நுட்ப நிபுணரும், வர்த்தகப் பொருளியலாளருமான கலாநிதி கரோல் டிவிச்செட் இத்தகவலைத் தெரிவித்தார்.

அரச இரத்தினக் கல் கூட்டுத்தாபனத்துடன் இது தொடர்பான பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஆபரணங்களின் தரம் திருப்திகரமாக இருக்கிறது.

எனினும், சர்வதேச வடிவமைப்புத் தரத்துக்கு ஏற்ற வகையில் உள்ளூர் உற்பத்தி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ப-8)



சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு சித்திரக் கண்காட்சி ஒன்றை கொழும்பு பொது நூலக கண்காட்சி மண்டபத்தில் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் திரு. கே. எவ் ஜே. விஜேதாச ஆரம்பித்து வைத்தார். அவர் கண்காட்சியை பார்வையிட்ட போது எடுத்த படம். (ப)

# பாகிஸ்தானியபிரஜைகளிடம் ஹெரோயின், கொக்கேயின்

## தந்தையும் மகனும் கொழும்பில் கைது

கொழும்பு, ஜூன் 13

சுமார் இரண்டரை கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த பாகிஸ்தான் பிரஜை ஒருவரும், அவரது மகனும் திங்களன்று கொழும்பில் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி பாகிஸ்தானிய பிரஜை பல தடவை கராச்சி வழியாக இலங்கைக்கு வந்து சென்றிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட ஹெரோயினையும் அவர் கராச்சியிலிருந்தே கடத்தி வந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

அவரின் மகனிடமிருந்து "கொகேயின்" எனப்படும் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டது.

கொகேயின் போதைப் பொருள் இங்கு அதிகளவு பாவனையிலில்லை. அவற்றை இங்கே புதிதாக அறிமுகப்படுத்துவதற்காக அவர்கள் கொண்டு வந்திருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

தற்போது அமுலில் இருக்கும் தீவிர போதை வஸ்துக்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் மேற்படி பாகிஸ்தானிய பிரஜைகள் இருவர் மீதும் வழக்குத் தொடரப்படவிருக்கிறது. (ப-ர)

## அனுதாபச் செய்திகள்

கொழும்பு, ஜூன் 13

எகிப்தியப் பிரதமர் கலாநிதி புவாத் மொஹிதீனின் மறைவு குறித்து ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, பிரதமர் திரு. ஆர். பிரேமதாச, வெளிவிவ அமைச்சர் ஜனாப் ஏ.சி- எஸ்-ஹமீத் ஆகியோர் அநுதாபச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளனர். (ப-7)

## 9,000 கிலோ சீனி கைப்பற்றப்பட்டது

### விஷம் கலந்திருப்பதாக சந்தேகம்

மாவனல்லை, ஜூன் 12

தனியார் வர்த்தகர்களால் கேகாலை நகரில் விற்பனை செய்யப்பட்டதாக கருதப்படும் சீனியை கைப்பற்றி பரிசோதனை செய்யும்படி, கேகாலை மேலதிக

தாக பல புகார்கள் வந்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

9 ஆயிரம் கிலோ சீனியை அதிகாரிகள் கைப்பற்றினர். அரசாங்க அதிபர் காரியாலயத்தின் உணவுக் கட்டுப்பாட்டு

## 7 கோடி ரூபா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தி

குடும்பத்தை பராமரித்து வந்த ஒருவரை இழந்த குடும்பங்களுக்கு நிரந்தர வருமானம்


கொழும்பில் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி பாகிஸ்தானிய பிரஜை பல தடவை கராச்சி வழியாக இலங்கைக்கு வந்து

அவரின் மகனிடமிருந்து "கொகேயின்" எனப்படும் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டது.

கொகேயின் போதைப்

தீவிர போதை வஸ்துக்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் மேற்படி பாகிஸ்தானிய பிரஜைகள் இருவர் மீதும் வழக்குத் தொடரப்படவிருக்கிறது. (ய-ர)



விக்டோரியா நீர்த் தேக்கத் திட்டத்தின் கீழ், முன்னர் வீதிகள் குடியிருப்புகள் இருந்த பகுதிகளில் இப்போது நீர் நிறைந்து வருகிறது. எஞ்சியுள்ள பகுதியில் நீர் நிறைக்கும் வேலைகள் இன்று ஆரம்பமாகும். ஏற்கனவே, நீர் நிறைக்கப்பட்டிருக்கும் பகுதிகளை காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசாநாயக்கா ஞாயிற்றுக்கிழமை படகில் சென்று பார்வையிட்ட போது எடுத்த படம். (ப)

## 126 வீரர்கள் சரணடைந்தனர்

புதுடில்லி, ஜூன் 12

அமிர்தசரஸ் பொற்கோயில் தாக்கப்பட்டதற்கு எதிராக கிளர்ச்சி செய்த 126 சீக்கிய இராணுவ வீரர்கள் இன்று உத்தர பிரதேசத்தில் பாதுகாப்புப் படையினரிடம் சரண் அடைந்தனர்.

பிஹார் மாநிலத்தின் ராம்கார் படைத் தளத்திலிருந்து அவர்கள் வெளியேறி பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸ் புனித நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

இடைவழியில் உத்தர பிரதேசத்தில் பாதுகாப்புப் படையினரிடம் சரண் அடைந்தனர், என்று தெரிவிக்கப்படுகிறது.

200 சீக்கிய இராணுவ வீரர்கள் இதுவரை கைதாகி உள்ளனர். (ப)

## வருடாந்த பொதுக்கூட்டம்

சித்தன்கேணி, ஜூன் 13

சித்தன்கேணி கணேச வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம், இன்று 13 ஆம் திகதி புதன்கிழமை, வித்தியாலய அதிபர் சைவப்புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் ("நகுலன்") தலைமையில் நடைபெறும்.

வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் இப் பொதுக் கூட்டத்தில் புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படுவர். (எ)

தினபதியிலும், சிந்தாமணியிலும் (மூலம் குறிப்பிடாது) பிரசுரிக்கப்படும் வெளிநாட்டுச் செய்திகள் அனைத்தும் பி. பி. சி., அ. இ. வா., டி. பி. ஏ. என். எஸ்.-வெ தூ.நி. ஆகியவற்றிலிருந்து கிடைப்பனவாகும்.

இப்பத்திரிகையை அச்சிட்டுவெளியிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு — 12. (இலங்கை) தபாற்பெட்டி 1613 வெளியிட்ட திகதி 13 ஜூன் 1984.

Dinapathi, 5, Gunasena Mawatha, Colombo 1,2 P. O. Box 1613.

## குவைத் கப்பல் மீது தாக்குதல்

பாஹ்ரேன், ஜூன் 12

ஈரானுக்கும், ஈராக்குக்கும் யுத்தம் நடைபெறும் வளைகுடாப் பிரதேசத்தில் குவைட் கப்பலொன்று நேற்று முன்தினம் இனம் தெரியாத விமானமொன்றால் தாக்கப்பட்டது.

ஒரு ஏவுகணை கப்பலில் தீயை ஏற்படுத்தியது. ஆனால் தீ பரவாது கட்டுப்படுத்தப்பட்டதும், கப்பல் கட்டார் நோக்கிப் புறப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. (ண)

# 7 கோடி ரூபா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

ஆடம்பரமற்ற முறையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் இலங்கையின் சார்பில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமும், புனர்வாழ்வு அமைச்சின் செயலாளருமான ரியர் எட்மிரல் ஆர். எச். பெரேராவும், நோர்வே அரசின் சார்பில் இலங்கையிலிருக்கும் நோராட் நிறுவனத்தின் நிரந்தரப் பிரதிநிதி திரு. எல்விண்ட் டிங்ப்டாட்டும் கைச்சாத்திட்டனர்.

வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர் வாழ்வு அளிக்கவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இந்த நிதி உபயோகப்படுத்தப்படும்.

பாதிக்கப்பட்டிருக்கும் நடுத்தர, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்குப் புதிய வீடுகளை கட்டிக் கொடுக்கவும் —

குடும்பத் தலைவரை அல்லது குடும்பத்தை பராமரித்து வந்த ஒருவரை இழந்த குடும்பங்களுக்கு நிரந்தர வருமானம் தரக்கூடிய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவும் —

பாதிக்கப்பட்டவர்கள் சுயமாக சிறு வியாபாரங்களை ஆரம்பிக்கவும் —

தனியார் துறையில் தொழில் புரிந்து வருமானம் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர் வாழ்வு உதவிகள் வழங்கவும் மேலும் இந்த நிதி பயன்படுத்தப்படும்.

பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு புனர் வாழ்வு வழங்குவதற்காக நோராட் நிறுவனம் மனமுவந்து வழங்கியுள்ள இந்த உதவிக்கு இலங்கை அரசாங்கத்தின் சார்பிலும், பொது மக்கள் சார்பிலும், நோர்வே அரசுக்கும், அந்நாட்டு மக்களுக்கும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் நன்றி தெரிவித்தார். இவ்விரு நாடுகளுக்கிடையிலான நல்லுறவு மேலும் பலப்படுத்தப்படும் எனவும் அவர் அங்கு கூறினார். (ப-ய)

தனியார் வர்த்தகர்களால் கேகாலை நகரில் விற்பனை செய்யப்பட்டதாக கருதப்படும் சீனியை கைப்பற்றி பரிசோதனை செய்யும்படி, கேகாலை மேலதிக அரசாங்க அதிபர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

மேற்படி சீனியில் ஒருவகையான விஷம் கலந்து இருப்பதாக பல புகார்கள் வந்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

9 ஆயிரம் கிலோ சீனியை அதிகாரிகள் கைப்பற்றினர். அரசாங்க அதிபர் காரியாலயத்தின் உணவுக் கட்டுப்பாட்டு பிரிவினர் அவற்றை பரிசோதித்து வருகின்றனர்.

இந்த சீனியை பாவித்த பலர் சுகவீனமுற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-188)

## காட்டுக்குள் பச்சிளம் குழந்தை

கொழும்பு, ஜூன் 13

சுமார் 15 மணித்தியாலங்களாக காட்டுக்குள் அநாதரவாகக் கிடந்த பச்சிளம் குழந்தை ஒன்றை, திக்வெல்லைப் பொலீஸார் மீட்டனர்.

இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

திக்வெல்லையில் உள்ள வெடுகெல்லை பகுதியில் பொல்பிந்தின தோட்டத்தில் குழந்தையொன்றின் அழுகுரல் கேட்டது.

அதனைத் தொடர்ந்து அப் பகுதி மக்கள், திக்வெல்லை பொலீஸ் அதிகாரியான திரு. ஹெட்டியாரச்சியுடன் சென்று காட்டுக்குள் தேடினர்.

ஓர் ஆலமரத்துக்கு அடியில், பச்சிளம் குழந்தையொன்று, எறும்புக் கடியால் கதறிக் கொண்டிருந்தது.

குழந்தையை பெத்திகம ஆஸ்பத்திரியில் பொலீஸார் சேர்த்தனர்.

உடனடி சிகிச்சைகளின் பின்னர் தற்சமயம் குழந்தை தேறி வருகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக அவ்வூரைச் சேர்ந்த 30 வயதுடைய பெண்ணொருத்தி பொலீஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த யுவதியை பொலீஸார், மாத்தறை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர். அவர் யுவதியை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ப-11)



கொள்வனவு, ஏற்றுமதி தொடர்பான கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 18ஆம் திகதி ஒபெரோய் ஹோட்டலில் நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்ள வந்த மேற்கு ஜெர்மன் புனர் குழுவை படத்தில் காணலாம். (த-ச)

## தேவராஜன் நினைவாஞ்சலி கூட்டம்

கொட்டகலை, ஜூன் 12

"கடமையே தெய்வமென, தாம் ஏற்றுக்கொண்ட பணியைச் செய்தவர் அமரர் தேவராஜன். தன்னை நம்பிய சங்க அங்கத்தவர்களின் நலனுக்காக மட்டுமல்லாமல் சமூக நலனுக்கும் தொண்டாற்றி வந்தவர் அவர். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற அஞ்சலி செலுத்துவோம்"

ஐக்கிய இலங்கை சலவை சலூன் தொழிலாளர் யூனியன் பொதுச் செயலாளராக சேவை ஆற்றி அமரரான திரு. தேவராஜனின் அஞ்சலிக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய அதன் தலைவர் திரு. என். முத்தையா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

சமூகத்திற்காகவும், மக்களுக்காகவும் தொண்டு செய்து தன்னைச் சார்ந்தவர்களையும் உயர்த்துவதே உண்மை வாழ்வென காட்டிச் சென்றவர்தான் அமரர் தேவராஜன்.

இறந்து போனவர்களை மண்ணுக்குள் மூடிவிட்டு சிலரை மாத்திரம் மனதுக்குள் குடிகொள்ளச் செய்கிறோம். அதுதான் தொண்டுக்கு செய்யும் நன்றிக் கடன்! என்றார்.

ஐ. இ. ச. ச. தொழிலாளர் யூனியன் பொதுச் செயலாளரான திரு. பி. எஸ். மணியம், நிதிச் செயலாளர் திரு. ச. ஜெகதீஸ்வரன், திரு. தங்கவேலு, திரு. துரைராஜ் உட்பட மற்றும் பலர் அங்கு உரையாற்றினர். (வ-164)

## 4 சகோதரர்கள் பிணையில்

பள்ளிவாசலில் முறைகேடாகப் பிரவேசித்து உண்டியலுக்குப் பூட்டு போட்டதாகச் சந்தேகிக்கப்பட்ட 4 சகோதரர்கள் திங்களன்று கொழும்பு பிரதம நீதிவான் திரு. கொலின் ஏ. அமரசிங்கா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டனர்.

கண் ஆஸ்பத்திரிச் சந்தி தெமட்டமரத்தடிப் பள்ளிவாசலில் பிரவேசித்த பிரஸ்தாப நான்கு சகோதரர்களும், பள்ளிவாசல் உண்டியலுக்கு சட்ட விரோதமாக பூட்டு போட்டார்கள் என்று தெரிவித்து கறுவாக்காட்டுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். (ப-74)